# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 24 ஞாயிற்றுக்கிழமை (08-06-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:193


இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புப் பற்றி

# தெளிவான வரைபை முன்வைத்தாலேயே பேச்சை தொடரலாமென புலிகள் அறிவிப்பு

## பாலசிங்கம் நேற்றுத் தெரிவிப்பு



கொழும்பு,ஜூன்8

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான தனது தெளிவான நிலைப்பாட்டை அரசு முன்வைத்தாலேயே அதுபற்றி அரசுடன் பேசமுடியும் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் விவரம் அடங்கிய திட்ட வரைபை இலங்கை அரசு தெளிவாகவும் உறுதியாகவும் முன்வைப்பதன் மூலமே பேச்சுக்களைத் தொடரமுடியும் என்று புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் நேற்றுத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் கோரும் வடக்குக் கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் ஒன்றை வழங்குவது தொடர்பான விடயத்தில் இலங்கை அரசு உடன்பாட்டுக்கு வந்துள்ளதாக வெளியான செய்திகள் தொடர்பாகக் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பான புலிகளின் கோரிக்கையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு அண்மையில் நிராகரித்திருந்தது. அத்தகைய இடைக்காலக் கட்டமைப்பு ஒன்றை இலங்கை அரசமைப்புக்கு உட்பட்டு வழங்க முடியாது என்றும், விடுதலைப் புலிகள் இணங்கினால் அந்த இடைக்கால கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளைக்

(13ஆம் பக்கம் பார்க்க)

## டோக்கியோ மாநாட்டு ஏற்பாடுகள் பூர்த்தி!

டோக்கியோ,ஜூன்8

டோக்கியோ அகாசாகா ஹோட்டலில் நாளை திங்கட்கிழமை காலை ஆரம்பமாகும் - இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டத்துக்கான - ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகியுள்ளன.

இலங்கை அரசின் இணைப் பிரதிநிதிகளாக இந்த மாநாட்டில் கலந்துகொள்வர் என முன்னர் எதிர்பார்க்கப்பட்ட விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்கள் இந்த மாநாட்டில் பங்குபற்றமாட்டார்கள் என்பது ஓரளவு உறுதியான நிலையில் மாநாடு 'சூடு' பிடிப்பதும் ஓரளவு தணிந்துள்ளது.

இந்த மாநாட்டின் மூலம் உதவும் நாடுகளிடமிருந்து வருடத்துக்கு நூறு கோடி அமெரிக்க டொலர் (சுமார் பத்தாயிரம் கோடி ரூபா) என்ற அடிப்படையில் அடுத்த மூன்று வருடத்துக்கு சுமார் முப்பதாயிரம் கோடி

(13ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பான் மாநாட்டில் இந்தியா பங்குபற்றும்

கொழும்பு,ஜூன்8

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நாளை ஆரம்பமாகவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் இந்தியா பங்குபற்றவிருப்பதாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் இந்த மாநாட்டில் பங்குபற்றும் பட்சத்தில் இந்தியா பங்குபற்றமாட்டாது என்று இந்தியா முன்னர் அறிவித்திருந்தது.

விடுதலைப் புலிகள் இந்த மாநாட்டில் பங்குபற்றமாட்டார்கள் என்பது உறுதியாகியுள்ள நிலையில், ஜப்பானில் உள்ள இந்தியத் தூதரை இந்த மாநாட்டில் பங்குபற்றுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

சர்வதேச செய்தி ஏஜென்ஸி ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டது.

(ம-3-12)

## உதவி மாநாட்டில் கிடைக்கும் நிதி புலிகள் ஊடாகவே செலவிடப்படும்

### அமைச்சர் பீரிஸ் ஜப்பானில் வைத்து உறுதி

- டோக்கியோவிலிருந்து ந.வித்தியாதரன் -

டோக்கியோ,ஜூன்8

"உதவி வழங்கும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டில் புலிகள் பங்குபற்றினாலும் பங்குபற்றாவிட்டாலும் இந்த மாநாட்டின் மூலம் வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்குக் கிடைக்கும் நிதி, புலிகளின் நேரடிப் பங்குபற்றலில் - அவர்களின் ஊடாக - அவர்களின் கண்காணிப்பில் - அவர்களின் அதிகளவு பங்களிப்புடைய ஏற்பாடுகளுக்கு அமையவே - செலவிடப்படும். இதனை உதவி வழங்கும் நாடுகளுக்கும் சர்வதேச அமைப்புகளுக்கும் தெளிவாக எடுத்துரைத்துள்ளோம்.''

அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் உதயனுக்கு நேற்று வழங்கிய விசேட பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.



மாநாடு நடைபெறவிருக்கும் டோக்கியோ 'அகாசாகா பிறின்ஸ்' ஹோட்டலில் - மாநாட்டுக்கு சுமார் 36 மணித்தியாலங்களுக்கு முன்னர் - அவர் இந்தப் பேட்டியை அளித்தார்.

"இடைக்கால நிர்வாகம் தொடர்பான பிரச்சினை காரணமாகவே இந்த மாநாட்டில் தாங்கள் பங்குபற்றவில்லை என்று புலிகள் அறிவித்துள்ளனர். புலிகள் பங்குபற்றாமல் விட்டமைக்கு வேறு

(13ஆம் பக்கம் பார்க்க)

## பல நாட்டுத் தலைவர்களுடனும் ரணில் ஜப்பானில் நேற்று பேச்சு!

டோக்கியோ,ஜூன்8

டோக்கியோவில் நாளை ஆரம்பமாகவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் பங்குபற்ற ஜப்பான் வந்துள்ள இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பல நாட்டுத் தலைவர்களுடன் முக்கிய பேச்சுக்களை நடத்தி வருகின்றார்.

ஹிரோசிமாவில் தங்கியுள்ள பிரதமருக்கு நேற்றிரவு ஹிரோசிமா ஆளுநர், மேயர் மற்றும் அங்குள்ள வர்த்தக சம்மேளனத்தினர் இரவு விருந்தளித்து கௌரவித்தனர்.

அங்கிருந்து இன்று காலை புறப்படும் பிரதமர் பிற்பகலில் டோக்கியோ சவரா(Sawara) பௌத்த ஆலயத்தில் புதிய Temple Dagaba கட்ட வேலைகளை ஆரம்பித்துவைப்பார்.

நாளை காலை டோக்கியோ அகாசாகா பிறின்ஸ் ஹோட்டலில் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் ஆரம்பமாகின்றது. அதற்கு முன்னர் அன்று காலை பிரதமர் ரணில் சுமார் 15 நிமிடநேரம் அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சர் ஆர்மிடேஜ்ஜை சந்தித்து பேசுகின்றார்.

ஜப்பானியப் பிரதமர் யுனிச்சிரோ கொய்சுமி, உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தை ஆரம்பித்து வைப்பார். அவரது உரையைத் தொடர்ந்து

(14ஆம் பக்கம் பார்க்க)

## டோக்கியோ மாநாட்டில் நோர்வேயின் முழுமையான பங்களிப்பு இல்லையாம்

டோக்கியோ,ஜூன் 8

நாளை டோக்கியோவில் ஆரம்பமாகவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்குபற்றாத நிலை ஏற்பட்டுள்ளதால் அந்த மாநாட்டில் நோர்வேயின் பங்களிப்பு முழுமையாக இருக்காது என எதிர்பார்க்கப்படுகிறது.

டோக்கியோ மாநாட்டில் அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுடன் நோர்வேயும் இணைத் தலைமை வகிப்பதாக இருந்தது. ஆனால், தற்போதைய சூழலில் அந்த இணைத் தலைமைப் பொறுப்பை ஏற்பதில்லை என்று நோர்வே முடிவு செய்திருப்பதாக அறியவந்தது.

தாம் மேற்கொண்டுள்ள இலங்கை சமாதான முயற்சிகளில் பாதிப்பு ஏற்படக்கூடாது என்ற காரணத்தினாலேயே நோர்வே இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதாக இருந்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனும், சமாதானக் குழுவின் தலைவரும் பிரதி வெளிவிவகார அமைச்சருமான விடர் ஹெல்கிஸனும் இப்போது டோக்கியோ மாநாட்டில் பங்குபற்றமாட்

(14ஆம் பக்கம் பார்க்க)

கிரனேட் வீச்சு; துப்பாக்கிச் சூடு!

## மட்டு. ஆரையம்பதியில் தந்தை, மகள் உயிரிழப்பு!

மட்டக்களப்பு,ஜூன்8

மட்டக்களப்பு, ஆரையம்பதியில் இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டுவருவதாகக் கூறப்படும் ரெலோ வரதன் குழுவைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரும் அவரது இரண்டு வயது மகளும் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் நடந்த கிரனேட் வீச்சு மற்றும் துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் உயிரிழந்தனர்.

செல்வா நகர் கிழக்கை சேர்ந்த வினோத் என அழைக்கப்படும் சின்னையா சாமுவேல் என்பவரும் அவ

(14ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை கிரனேட் வீச்சில் வயோதிபர் நேற்றிரவு காயம்!

திருகோணமலை,ஜூன்8

திருகோணமலை பிரதான வீதியில் நேற்றிரவு 9 மணியளவில் வீடு ஒன்றின் மீது கிரனேட் வீசப்பட்டதில் வயோதிபர் ஒருவர் படுகாயம் அடைந்தார். இதனால் அங்கு பதற்றநிலை ஏற்பட்டது.

தம்பலகாமம், கோணேஸ்வரர் ஆலய பரிபாலன சபை உறுப்பினரான ஆர்.சுப்பிரமணியம்(வயது 65) என்பவரே காயமடைந்த நிலையில் திருகோணமலை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காயமடைந்தவர் தனது வீட்டு முற்றத்தில் கிராமசேவையாளர் ஒருவருடன் உரையாடிக்கொண்டிருந்த சமயமே கிரனேட் வீச்சு இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. (ம-3)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் திருமலையில் சுட்டுக்கொலை!

திருகோணமலை,ஜூன்8

திருகோணமலை திருஞானசம்பந்தர் வீதியில் நேற்று அதிகாலை 6 மணியளவில் ஈ.பி.டி.பி. அமைப்பின் உறுப்பினர் ராமசாமி விஜயநாதன் (வயது 33) என்பவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கடந்த 12 வருடகாலமாக ஈ.பி.டி.பி. அமைப்பில் அங்கத்தவராக இருந்த அவர், திருஞானசம்பந்தர் வீதியில் அவரின் சகோதரன் நடத்திவரும் விடுதியில் பணிகளில் உதவி செய்து வந்தார் என்றும் -

சம்பவதினம் அந்த விடுதிக்கு முன் தண்ணீர் தெளித்துக்கொண்டிருந்த சமயம் இனந்தெரியாதவர்கள் அவரைச் சுட்டுக் கொலை செய்ததாக

(13ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# புலிகளின் தலைமையில் நிர்வாகம்; நீடித்த சமாதானத்துக்கு அதுவே வழி

## வடமாகாண அதிபர்கள் சங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜுன்8

வடக்கு-கிழக்கில் பொருத்தமான இடைக்கால நிர்வாக கட்டமைப்பு ஒன்றை விடுதலைப் புலிகள் தலைமையில் ஏற்படுத்துவதே நீடித்த சமாதானத்துக்கு வழிவகுக்கும்.

- இவ்வாறு வடமாகாண அதிபர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக சங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைப் பரிணாமங்கள் இன்று எவருக்கும் ஒளிவுமறைவற்ற ஒன்றாகும்.

ஐம்பது வருடங்களுக்கு மேலாக புரையோடிப்போயுள்ள இப்பிரச்சினையானது வேண்டுமென்றே புறந்தள்ளி, தோற்கடிக்கப்பட்ட நியாயமான பல சாத்வீகப் போராட்டங்களைக் கடந்து, கடந்த இருபது ஆண்டு காலத்தில் ஆயுதப் போராட்டமாக உருவெடுத்து அனைத்து இன மக்களுக்கும் அழிவினைத் தந்த ஒரு போராக மாறியது.

கடந்த காலங்களில் தென்னிலங்கை அரசியல் தலைவர்களும் அரசியல் கட்சிகளும் மேற்கொண்ட தீர்க்கதரிசனமற்ற போட்டி அரசியல் நடவடிக்கைகளால் தமிழ் பேசும் மக்களது உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்க நேரிட்டது.

இனங்களுக்கிடையேயான ஒற்றுமை, புரிந்துணர்வு என்பன அற்றுப் போவதற்கு அவை காரணமாக அமைந்தன. இன்று பல கசப்பான அனுபவங்களின் பின்னர் காலங் கடந்தாயினும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க புரிந்துணர்வு ஒப்பந்தமானது சமாதானத்தை விரும்பும் மக்களுக்கு ஒரு நிம்மதிப் பெருமூச்சினை நல்கியது. ஆயினும், அந்த ஒப்பந்தத்தின் பினனர் அதில் ஒத்துக்கொள்ளப்பட்ட முனைப்பான விடயங்களை அமுலாக்குவதில் ஏற்படும் தடங்கல்களும் தாமதங்களும் சமாதானத்தின் பால் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைகளை சிதறடிப்பதாக உள்ளன.

மக்களின் இயல்பு வாழ்க்கையினை மீண்டும் ஏற்படுத்துவதற்கு பொருத்தமான நிர்வாக மீள் கட்டமைப்பொன்று அவசியமானது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

இதற்குப் பொறுப்பானவர்களை பொறுப்பாக அமர்த்தவேண்டியது அரசாங்கத்தின் கடப்பாடு ஆகும்.

சமாதானப் பேச்சு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமையில வடக்கு - கிழக்கு பிரதேச புனருத்தாரண நடவடிக்கைகள் நடைமுறைப் படுத்தவேண்டியது யதார்த்தமான ஒன்றாகும்.

இந்த விடயத்தில் ஏற்படும் இழுபறி நிலையானது சமாதானத்துக்கு அச்சுறுத்தலாக அமைந்துவிடக்கூடாது.

இரு தரப்பாரும் சமாதானத்துக்காக விட்டுக்கொடுக்கவேண்டிய விடயங்கள் ஏராளம் உள்ளன. போரின் தாக்கங்களால் நொந்துபோயுள்ள தமிழ்மக்களின் எதிர்பார்ப்புக்கள், மனிதாபிமானத் தேவைகள், உரிமைகள் மலினப்படுத்தப்படுமானால் அது மீண்டும் நாட்டில் அமைதியற்ற சூழலை ஏற்படுத்தும். எனவே, இந்த விடயத்தில் பொருத்தமான நிர்வாகக் கட்மைப்பொன்றினை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் ஏற்படுத்துவதே நீடித்த சமாதானத்துக்கு அடிப்படையாக அமையும்.

இதனை அரசாங்கமும் சமாதானத்தின்பால் அக்கறையுள்ள அமைப்புக்களும் ஏற்றுக்கொண்டு தாமதமின்றி அதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என வடமாகாண அதிபர்கள் சங்கம் கோருகின்றது.

- என்றுள்ளது. (ம)

# வடக்கில் கண்ணிகளை அகற்ற 6 வருடங்கள் தேவை

## ஸ்கொட்லாந்து நிபுணர் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜுன்8

வடக்கில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் மற்றும் நிலக்கண்ணிவெடிகள் ஆகியவற்றை அகற்றி முடிப்பதற்கு சுமார் 6 வருடங்கள் தேவைப்படும் என்று ஸ்கொட்லாந்து நாட்டைச் சேர்ந்த மிதிவெடியகற்றும் தொழில்நுட்ப நிபுணர் டேன் தெரிவித்துள்ளார்.

சுமார் ஒரு மில்லியன் வெடிபொருள்கள் இங்கு புதைக்கப்பட்டுள்ளதாக பதிவுகள் தெரிவிக்கின்றபோதும், அது இன்னும் அதிகமாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

படையினரால் வழங்கப்பட்ட வரைபடங்களை வைத்துக்கொண்டு இவற்றை அகற்ற முடியாது உள்ளதாகவும் அந்த வரைபடங்களில் யாவும் நீண்ட பிரதேசத்தைக் காட்டி இவற்றில் வெடிபொருள்கள் இருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர விவரங்கள் தெளிவாகக் காட்டப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனவே, குறிப்பிட்ட காலப்பகுதியை வரையறை செய்து கண்ணிகளை அகற்றமுடியாதெனவும் தெரிவித்துள்ளார்.

(ம-10-ரி)

# வீதி மோசமாகச் சேதம்

வடமராட்சி,ஜுன்8

பருத்தித்துறை - தம்பசிட்டி வீதியில் ஓராங்கட்டைச் சந்தி தொடக்கம் கல்லூரி வீதிச் சந்தி வரையிலான வீதி மோசமாகப் பழுதடைந்துள்ளது.

நகரில் உள்ள ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, வட இந்துமகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கு ஆயிரக்கணக்கான மாணவர்களும், நூற்றுக்கணக்கான ஆசிரியர்களும் பழுதடைந்த இவ்வீதி மூலமே செல்லவேண்டியுள்ளது.

இதனால், அவர்கள் பெரும் சிரமங்களையும், அசௌகரியங்களையும் எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன் வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, தொண்டைமானாறு ஊடாக யாழ்ப்பாணம், மானிப்பாய், நவாலி ஆகிய இடங்களுக்கு இவ்வீதியால் நடைபெற்றுவரும் இ.போ.ச., மினி பஸ் வண்டிகளைச் செலுத்துவதிலும் சாரதிகள் பெரும் இன்னல்களை அனுபவித்துவருகின்றனர். (ம-173)

## சங்கக் கிளை மீண்டும் திறப்பு

தென்மராட்சி,ஜுன்8

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை இல.2 கடந்த வெள்ளியன்று சாவகச்சேரி கல்லடி மூட்டு சந்தியில் உள்ள தனியார் வீடொன்றில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(எ-117)

# ஆண் நாய்களுக்கு குடும்பக்கட்டுப்பாடு

கட்டாக்காலி நாய்களின் தொல்லையைக் கட்டுப்படுத்த யாழ் மாவட்டத்தில் முதன்முதலாக பருத்தித்துறைப் பகுதியில் ஆண் நாய்களை மலடாக்கும் சத்திரசிகிச்சைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகமும் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன.

முதற்கட்டமாக பருத்தித்துறை நகரப் பகுதியைச் சேர்ந்த 28 ஆண் நாய்களுக்கு பருத்தித்துறை கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் வைத்து சத்திர சிகிச்சைகள் பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் வசீகரனால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் வடமராட்சிப் பிரதேசத்தில் பல்வேறிடங்களில் இது போன்ற நாய்களை மலடாக்கும் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டது

அடுத்து வரும் காலங்களில் இப்பிரதேசத்தில் உள்ள பெண் நாய்களுக்கு கருத்தடை சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-173)

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் வைகாசிப் பொங்கல் விழா நாளை

கிளிநொச்சி,ஜுன்8

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் விழாவை நாளை பெருமெடுப்பில் நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

இந்து மக்களின் வரலாற்று முக்கியத்துவம் மிக்க கண்ணகி அம்மன் ஆலயப் பொங்கல் விழா நீண்ட காலத்தின் பின்னர் இம்முறை மிகவும் சிறப்பான முறையில் நடைபெறவிருக்கின்றது.

தற்போதைய சமாதானச் சூழலில் வெளி மாவட்டங்களில் இருந்தும் பெரும் எண்ணிக்கையில் மக்கள் ஆலயத்தில் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பக்தர்கள் பொங்கலிடுவதற்கு ஏற்ற ஏற்பாடுகளையும் ஆலய பரிபாலன சபை செய்துள்ளது.

ஆலயத்துக்கான போக்குவரத்து நலன் கருதி தமிழீழ போக்குவரத்துக் கழகம் விசேட பஸ்சேவைகளை நடத்தவிருக்கின்றது. (ம-ரி)

# மாவட்ட சிறுவர் பிரச்சினை பற்றி வீரசிங்கம் மண்டபத்தில் மாநாடு!

யாழ்ப்பாணம்,ஜுன்8

குடாநாட்டில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடந்த 'சிறுவர் செயற்பாட்டுக்கான அழைப்பு' என்ற மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டது.

யாழ்.மாவட்ட சிறுவர் ஊடகத் துறையின் ஏற்பாட்டில் நடந்த இந்த மாநாடு நேற்றுக்காலை 10.30 மணிக்கு ஆரம்பமானது. நூற்றுக்கணக்கான சிறுவர்கள் இதில் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா, தமிழ்க்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், என்.ரவிராஜ், கல்வித் திணைக்களங்களின் அதிகாரிகள், யாழ்பொலீஸ் நிலைய அத்தியட்சகர்கள், சிறுவர் பாதுகாப்பு நிதிய அதிகாரிகள் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

கல்வி, சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் என்பன தொடர்பாக சிறுவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு துறைசார்ந்தவர்கள் விளக்கமளித்தனர்.

சிறுவர்களின் கல்வித்துறை சார்பாக - பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு நன்கொடை வழங்குமாறு வற்புறுத்துதல், வளப்பற்றாக்குறை, வள ஒதுக்கீட்டில் பாகுபாடு காட்டுதல், கல்விசார் ஊழியர்களின் அசமந்தப்போக்கு, விழிப்புலன் அற்றவர்களுக்கான நூல்கள் உரிய காலத்தில் கிடைக்காமை ஆகிய பிரச்சினைகள் ஆராயப்பட்டன.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக சிறுவர்கள் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்படுதல், சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுதல், உடல், உள ரீதியாகத் தண்டிக்கப்படுதல், மது, போதைவஸ்துக் கடத்தல்களில் சிறுவர்களைப் பயன்படுத்துதல் ஆகிய பிரச்சினைகள் குறித்துப் பேசப்பட்டன.

சுகாதாரம் தொடர்பாக - சிறுவர்களுக்கான போஷாக்கின்மை, சுகாதார விழிப்புணர்வு இன்மை, வைத்திய வசதிகள் போதியளவு இன்மை போன்ற பிரச்சினைகள் சுட்டிக்காட்டப்பட்டன.

இந்தப் பிரச்சினைகள் குறித்து சிறுவர்கள் எழுப்பிய வினாக்களுக்கு துறைசார்ந்தவர்கள் விளக்கமளித்தனர்.

(ம-9)



வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடந்த சிறுவர் மாநாட்டில் கலந்துகொண்ட சிறுவர்களை முதலாவது படத்திலும், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், விழிப்புலனற்ற சிறுவனான பே.சுதாகரன் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். *(படம்: அற்புதன்)*

# சிறுவர் மீதான துஷ்பிரயோக நடவடிக்கைகளை பதவியைக் கொண்டு மறைக்கப்பார்க்கிறார்கள்

## யாழ்.நீதிவான் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம்,ஜுன்8

தமது பதவி அந்தஸ்தைப் பயன்படுத்தி சிறுவர் பாலியல் துஷ்பிரயோக நடவடிக்கைகளை பூசி மெழுகுவதற்கு சிலர் முயற்சி எடுக்கின்றார்கள்: முழுப் பூசனிக்காயை சோற்றில் புதைக்க முயலும் இத்தகையவர்களின் நடவடிக்கைகள் கண்டனத்துக்குரியவை.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிவான் இ.த. விக்னராஜா.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற சிறுவர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாகரிகமான ஒரு சமுதாய உருவாக்கத்துக்கு சட்டத்துறை மிகவும் உறுதுணையானது. இன்றைய சிறுவர்கள் தமது வாழ்வில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகிறார்கள். அவர்களுக்கும் சட்டத்துறையே பாதுகாப்பு அளிக்கவேண்டும்.

அநாதரவான சிறுவர்களுக்கு மட்டுமன்றி பெற்றோர்களுடன் வாழும் சிறுவர்களுக்கும் மாவட்ட நீதிவான்தான் பாதுகாவலர். அதனால்தான் சிறுவர்கள் தொடர்பான விவகாரத்தில் நீதிமன்றம் தலையிட்டு கட்டளையிட வேண்டியிருக்கிறது.

தவறுகள் எங்கு யார் செய்தாலும் ஒன்றுதான். சிறுவர்கள் மீது பாலியல் துஷ்பிரயோக நடவடிக்கைகளை மேற்கொள்வோர் அந்த விடயத்தில் சட்டத்தில் இருந்து தப்பிவிடுவதற்கு முயற்சிக்கின்றார்கள்.

சிறுவர் துஷ்பிரயோக நடவடிக்கைகள் சம்பந்தமாகப் பலரைப் பொலீஸார் நீதிமன்றில் நிறுத்தியிருக்கின்றார்கள். நீதிமன்றம் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

குடாநாட்டில் கடந்த காலங்களில் நடைபெற்ற ஒருசில சம்பவங்கள் சிறுவர்கள் தொடர்பாக மிகுந்த விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கின்றது.

சிறுவர்கள் தமது கல்வியை ஆன்மீகத்துடன் இணைத்து முன்னெடுக்க வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் சீரழிவு நடவடிக்கைகளைத் தடுக்கமுடியும் என்றார் நீதிவான்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான என்.ரவிராஜ் பேசுகையில் கூறியதாவது:-

தம்மைப் புத்திசாலிகள் என்று கூறிக்கொண்டிருக்கின்ற சிலர் நீதித்துறை குறித்து அவதூறாகப் பேசிக்கொள்வதும் - கண்டபடி விமர்சிப்பதும் மிகவும் கண்டிக்கத்தக்கதாகும் - என்றார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம் உட்பட பலரும் உரையாற்றினார்கள்.

(ம-4)

| | | | |
|---|---|---|---|
| | | சூ. ▲ ராகு வெ. புதன் | சனி |
| செ. | இராசிச் சக்கரம் | | வியா. |
| | | | சந் |
| | கே. | | |

# இந்த வார இராசி பலன்

## 08-06-2003 - 14-06-2003

### மாற்றம்:

உத்தரம் (முதலாம்) சிங்கராசியில் சந்திரன் நிற்கும்.

சமாதானப்பேச்சு தொடரும். வெளிநாட்டு பணவரவில் தேக்கநிலை, சட்டதிட்டம், கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம். அரசியல்வாதிகளிடையே ஒரு புரிப்பற்றநிலை தோன்றும். தெற்கு அரசியல்வாதிகள் புதிய, புதிய கருத்துக்களைத் தெரிவித்து வருவர். இந்தியாவில் வடமுனையில் ஆயுத வன்முறைகள் தோன்ற இடமுண்டு. இலங்கையில் மறைமுகத் தலையீடுகள், உலகச் செல்வாக்குகளைத் தேடுதல் போன்ற பலன்கள் கொடுக்கும். மத்திய கிழக்கு நாடுகளில் அமெரிக்கா தன் ஆதிக்க வலுவை நிலைநாட்டப் போராடும். ஐ.நா. புதிய தீர்மானங்களை உருவாக்கும். இந்து, பசுபிக் பிராந்திய நாடுகளில் காற்று, பூகம்பநிலை, நிலநடுக்கங்கள் கொடுக்கும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

கிரகங்கள் பகைத்து தீய பலன்களைச் செய்தால், பெற்றோர், சகோதரங்கள், மனைவி, பிள்ளைகள் கூட பகைத்து வேதனை தருவார்கள். இடமாற்றங்கள், அரச தண்டனை, மனப்பதற்றம், குடும்பத்தினருடன் வாக்குக் கலக்கம் என்பன கொடுக்கும். தூரத்துப் பிரயாணங்களைப் பின்போடவும். வாய்வுத்தொல்லை கொடுக்கல் வாங்கலால் வேதனை வரும். கால் உளைவுக்கு வைத்தியம் செய்வீர்கள். காணி பூமியில் மாற்றங்கள் கொடுக்கும் காலமாகும். சந்தைத் துறை, பாதுகாப்புத்துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன், வெள்ளி.*

### இடபம்

படிக்காத மாணவர்கள் உருவாகும் ஒரு சமூகம் வருங்காலத்தை எட்டிப் பார்க்கப் போகின்றது. பதற்றநிலை வரும். தொழில்பீடத்தில் மேலதிகாரிகளுடன் கருத்து வேற்றுமை வர இடமுண்டு. காணி பூமி, வாகனச் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்கள் உதவி செய்வார்கள். மாணவர்களுக்குச் சித்திகள் கிடைக்கும். நாரிநோ, நெஞ்சுநோ, சலவருத்தம் என மருந்து எடுப்பீர்கள். குருத்துறை, ரீ.வி, வீடியோ துறையினர்கள் வருமானச் சிறப்பை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன், வெள்ளி.*

### மிதுனம்

எவரும் நாட்டின் சட்டதிட்டத்திற்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். அல்லது தண்டனை அனுபவிக்க வேண்டிவரும். எப்படி இவரை மடக்கலாம் என விதி சதிசெய்யக் காத்திருக்கும். வருமானம் அதிகரிக்கும். அரசியல் வாதிகள், அரசியல் கட்சியினர் உதவிகள் செய்வார்கள். மாணவர்களுக்குச் சித்திகள் கிடைக்கும். செய்தித்துறை, புத்தகத் துறையினர்கள் அதிகநன்மைகள் அடைவார்கள். தூரத்தில் இருக்கும் உறவினர்களால் உதவிகள் கிடைக்க இடம் உண்டு. சளி, வாய்வுக்கு வைத்தியம் செய்வீர்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன்.*

### கடகம்

ஆனி, ஆடிமாதங்கள் சூனிய மாதங்கள். மனிதர்கள் சுபகாரியங்களுக்கு விலக்கழிக்கப்பட வேண்டிய மாதங்களாகும். விவாகம் செய்தல், வீடுகட்டுதல் தவிர்க்கப்பட வேண்டும். அல்லது அங்கப்பிழையான பிள்ளைகள், தோஷப்பட்ட வீடுகளை உருவாக்கி விடுகின்றனர் சிலர். அதனால் அவர்களுக்கு துன்பம் மலிகின்றது. தொழில்பீடத்தில் பலதவறுகள் கண்டு வேதனைப்படுவீர்கள். மாணவர்கள் நன்மையடைவர். நாரிப்பிடிப்பு, சளித்தொல்லை வரும். போக்குவரத்துத்துறை, தரகுத்துறை, ஹோட்டல்துறை, விவசாயத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன், வியாழன்.*

### சிங்கம்

ஆண்பிள்ளைக் கண்டபடி கட்டுப்படுத்த முடியாமல் உள்ளது. ஏன் உங்கள் தொழில் பீடத்திலும் சிலரை உங்களால் கட்டுப்படுத்த முடியாத நிலையை நீங்கள் அறிந்து வேதனைப்படுவீர்கள். பொருள்வரவு, விசாரணை, மாணவர்களுக்கு உதவுதல், இடமாற்றம், புதிய நண்பர்கள் வரவு என்பன இருக்கும். தோல்வருத்தம், சளி, நெஞ்சுநோ போன்றனவும் குருத்துறை, மருந்து, சந்தைத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், சனி.*

### கன்னி

அளவறிந்து செலவழிந்து நிதானத்துடன் வாழும் உங்களுக்கு நிதானமற்று வேகமாகச் செல்லும் சிலரின் வாழ்வு பிடிக்காது. தொழில்பீடத்தில் அதிக பொருள் செலவுகள் கொடுக்கும். எதிர்ப்பாலாரின் தொல்லைகள், கூச்சசுபாவத்தால் பல இழப்பு, தீயவர்களால் தொல்லைகள என்பனவும், தூரத்துச் செய்தியால் மனவேதனையும் கொடுக்கும். கள்வர் பயம், தலைவருத்தம், வாய்வுத்தொல்லை என்பனவும் கொடுக்கும். மாணவர்களுக்கு நல்லதல்ல. எதிர்ப்புணர்வுகள் அதிகரிக்கும். குருத்துறை, செய்தித்துறை, நீதித்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி, சனி.*

### துலாம்

வீட்டுக்கு வீடு வாசல் படிதான். புத்தி சொன்னவருக்கே ஆலோசனை சொல்ல வேண்டி வரும் காலமாகும். கட்டுப்பாடற்றவர்களால் வேதனை, சோதனைகள் தொழில்பீடத்தில் வரும். பொருள் நஷ்டம், ஆஸ்பத்திரிச் செலவுகள் அதிகரிக்கும். மனச்சஞ்சலம், நாரிநோ, வாய்வுத் தொல்லை என்பன கொடுக்கும். மாணவர்கள் சிறப்பு அடைவார்கள். சட்டத்துறை, சந்தைத்துறை, மருந்து வியாபாரிகள் நன்மை அடைவார்கள். இடமாற்றங்களைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி, சனி.*

### விருச்சிகம்

உலகம் முழுவதும் போட்டி உணர்வுடன் துடித்துக் கொண்டிருக்கும் பொழுது உங்களால் மட்டும் எப்படி அமைதியாக இருக்க முடியும் என யோசிக்கின்றீர்களா? தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டிகள் வரும். பொருளால் வேதனை. கொடுத்த பொருள், காசு திரும்பவும் வாராது. மாணவர்களுக்கு புதிய கல்விச் சிறப்பு, இடமாற்றங்கள், நண்பர்களின் உதவி கிடைக்கும். அயலவர்கள் வேதனை தருவார்கள். வியாபாரத்துறை, குருத்துறை, இரும்புத்துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி, சனி.*

### தனுசு

பந்தபாசத்தால் கட்டுண்டு பலர் பல பிரச்சினைகளுக்குட்பட்டு பல தவறுகளை விடுகின்றார்கள். நடக்கும் திசாபுத்திப் பலன்களால் தொடர் நிகழ்ச்சியாக ஒருவருக்கு நன்மை, தீமைகள் நடக்க இடமுண்டு. தொழிலில் மந்தநிலை, மறைமுக எதிரிகள் தொல்லைகள், இடமாற்றங்கள், பணத்தட்டுப்பாடு என்பன இருக்கும். கால்பிடிப்பு, குத்துளைவு கொடுக்கும். தூரத்துச்செய்திகளால் நன்மைகள் கொடுக்கும் காலமாகும். மருந்துத்துறை, போக்குவரவுத்துறையினர் நன்மையடைவார்கள்.

அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன், வெள்ளி, சனி.

### மகரம்

நெடுந்தூர யாத்திரைதான் மனித வாழ்வு. எவரும் கரை காணமுடியாத நிலை. புதிய கல்வி அல்லது தொழில் முயற்சிகளைத் தேடுவீர்கள். மாணவர்கள் நன்மைகள் அடைவார்கள். தொழில்பீடத்தில் சக ஊழியர்களுடன் வாக்குக்கலகம் தோன்றும். உறவினர்கள் தொல்லைகள் கொடுப்பார்கள். பொருளொன்று தவறும். கால்வருத்தம், சலத்தொல்லை, உடல்களைப்பு தோன்ற இடம் உண்டு. தாய் வழியினரின் தொல்லைகள் அதிகரிக்கும். கடற்றொழில், சந்தைத்தொழில் போன்றவர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், வியாழன், வெள்ளி, சனி.*

### கும்பம்

ஞானம் ஒருவருக்கு காலத்துக்குத் தகுந்தமாதிரி மாறுவதனால் அஞ்ஞானமும் அந்தக் காலங்களில் தன் வெளிப்பாட்டைச் செயற்படுத்துகின்றது. தொழில்நிலையில் புதிய பொறுப்புக்கள் அதிகரிக்கும். அதிக அலைச்சல், பிடிவாத்தனம், இனஜனகள் குறைகூறுதல், பொருள் தவற இடமுண்டு. சில தீயவர்களின் சூழ்ச்சிவலைக்குள் விழுந்து பின்பு திருந்துவீர்கள். வீடு வாகனச் சிறப்பு அடைதல் போன்ற பலன்கள் நடக்கும். கால்வருத்தம், வாய்வுத் தொல்லைகள் கொடுக்கும். கடற்றொழில், அரசியல்துறை போன்ற துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், வியாழன், சனி.*

### மீனம்

மனிதர்களின் கட்டுப்பாட்டில்தான் அவரவரின் முன்னேற்றங்கள் தங்கியுள்ளன. தொழில் நிலையில் புதிய மாற்றம் தோன்றும். பொதுத்தொண்டுகள், பிறருக்கு உதவிசெய்தல், குடும்பத்தில் சச்சரவு அடைதல், வீடு வாகனயோகம் தேடிவரும். எதிரிகளுடன் போட்டி ஏற்படும். சலவருத்தம், வாய்வுத்தொல்லை ஏற்படலாம். இசைத்துறை, வங்கித்துறை, மருந்துத்துறை, சந்தைத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவர். மாணவர்களுக்குப் பலமாற்றங்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், வியாழன், சனி.*

**மகாதேவா ஜோதிடம்**

---

# 'அரும்புகள்' சிறுவர் நிதியம்; மருத்துவ மாணவரின் நன்முயற்சி

**மருத்துவ வசதிக்காக ஏங்கும் பண வசதி குறைந்த சிறார்களின் மருத்துவச் செலவுகளுக்கு கை கொடுக்க யாழ். பல்கலைக்கழக மருத்துவ மாணவர் ஒன்றியம் நிதியம் ஒன்றை ஸ்தாபிக்கின்றது.**

**'அரும்புகள்' சிறுவர் நிதியம் என்னும் பெயரில் தொடங்கப்படுகின்ற இந்த நிதியம் தொடர்பாக மருத்துவ மாணவர் ஒன்றியம் தரும் விளக்கம் இது.**

அவள் ஒரு பதினொரு வயதுச் சிறுமி. யாழ்நகரை அண்டிய கிராமம் ஒன்றில் வசித்து வருகின்றாள். பிறப்பிலிருந்தே இருதய அறையின் சுவரில் ஓட்டை இருப்பதனால் பல தடவைகள் வைத்தியசாலைக்குச் சென்று வந்திருக்கிறாள். இவளது தந்தை இவளின் சிறுவயதிலேயே இறந்துவிட்டார். இவளும் இவளது இளைய சகோதரியும் சென்ற வருடம் முதல் பாடசாலை செல்வதை நிறுத்தி விட்டனர். தாயார் வீடுகளுக்குச் சென்று சிறு வேலைகள் செய்வதன் மூலம் தனது பிள்ளைகளை மிகுந்த சிரமப்பட்டு காத்து வருகின்றாள். இந்நிலையில் இச்சிறுமியின் இருதயநோய் தீவிர மடைந்ததால் அவசர சத்திரச்சிகிச்சை செய்ய வேண்டுமென குழந்தை வைத்திய நிபுணர் ஆலோசனை வழங்கினார். ஆனால், நாளாந்த உணவிற்கே அல்லற்படும் அவர்கள் பலலட்சம் ரூபா பணத்திற்கு எங்கே போவார்கள்? பணம் இல்லை என்ற ஒரே காரணத்தினால் மட்டும் அவள் மேலதிக சத்திர சிகிச்சை செய்யவில்லை. பதிலாக விரைவில் நிகழப்போகும் மரணத்திற்காகக் காத்திருந்தாள்.

இது அண்மையில் நடந்த ஓர் உண்மைச்சம்பவம். எமக்குத் தெரியாமல் நடக்கும் நிஜங்களில் இதுவும் ஒன்று. இவள் போல் பல சிறுவர்கள் பணம் இல்லை என்ற காரணத்தினால் மேலதிக சிகிச்சைகள் செய்யாமல் எமது கண்முன்னே இறக்கும் சந்தர்ப்பங்கள் பல நிகழ்ந்துள்ளன.

இவர்கள் யார்? இவர்கள் எமது குழந்தைகள், எமது சகோதரர்கள், எமது தேசத்தின் எதிர்காலச் சமுதாயம். இச்சிறுவர்களைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள எமது தேசத்தின் ஏழைச்சிறுவர்களுக்கு மேலதிக சிகிச்சைகளை வழங்கி அவர்களுக்கும் வளமான எதிர்காலம் ஒன்றைக் கிட்டச் செய்வதற்காகவே 'அரும்புகள்' எனப்படும் இந்நிதியம் மருத்துவ மாணவர்களினால் ஆரம்பிக்கப்படுகின்றது. நம்மில் பலருக்கு உதவி செய்ய மனமும் தர்மம் செய்யப் பணமும் இருந்த போதிலும் அதனை எங்கே எவ்வாறு கொடுப்பது எனத் தெரியாமல் இருக்கிறோம். அவர்களுக்கான சிறந்த நிதியமாக 'அரும்புகள்' இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

நாம் உழைக்கும் பணத்தில் நமது அடுத்த பிறப்பிற்கும் உதவுவது நாம் செய்யும் தான தர்மமே எனப் பெரியோர்கள் கூறுவதுண்டு. எனவே, மருத்துவ மாணவர்கள் தமது அருமுயற்சி வெற்றியடைய உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பெருமனது படைத்தோர்களிடம் இருந்து நிதியுதவிகளை எதிர்பார்க்கின்றார்கள்.

இந்நிதியத்தின் வங்கிக் கணக்கு மருத்துவ மாணவர் ஒன்றியத்தினால் குழந்தை வைத்திய நிபுணர் மற்றும் ஏனைய வைத்திய நிபுணர்களின் மேற்பார்வையின் கீழ்ப் பேணப்படும். சிறுவர்களுக்கான நிதியுதவிகள் யாவும் குழந்தை வைத்திய நிபுணர்களினதும் யாழ். மருத்துவபீடாதிபதியினதும் முறையான பரிந்துரைப்புடன் குடும்ப நிலைமை ஆராயப்பட்டே வழங்கப்படும்.

பணம் வழங்க விரும்புபவர்கள் நேரடியாக இலங்கை வங்கி, மேற்றக் கிளை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் கணக்கு இலக்கம் 5-21-20 22431-4 இல் வைப்பிலிடலாம். மேலதிக விவரங்களுக்கு தொலை பேசி 021 - 2222134 அல்லது E.mail- hsfmj@sltnet.lk மருத்துவ மாணவர் ஒன்றியத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

இவர்கள் எங்கள் குழந்தைகள், நாம் வழங்கப்போகும் ஒவ்வொரு பணமும் குழந்தைகளின் உயிர் காக்கும். ✪

# செயலமர்வில் கலந்துகொள்ளுமாறு யாழ்.வலய ஆசிரியருக்கு அழைப்பு

ஆசிரிய நூலகர்களுக்காக நாளை மறுதினம் முதல் யாழ்.பல்கலைக்கழக நூலகக்கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள செயலமர்வில் பின்வரும் ஆசிரியர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

வி.ஜெயராசா (முத்துத்தம்பி ம.வி.), எஸ்.சந்திரபோஸ் (சென்.ஜேம்ஸ் ஆண்கள் ம.வி.), ரி.ஜெயக்குமார் (கொக்குவில் இந்துக்கல்லூரி), எம்.நவரட்ணம் (யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம்), ஜே.நவலோகநாதன் (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி), திருமதி பி.சண்முகநாதன் (வைதீஸ்வராக் கல்லூரி).

திருமதி கௌ.கணேசலிங்கம் (நாவாந்துறை றோ.க.த.க. பாடசாலை), ஜே.மைக்கல் (சென்பற்றிக் கல்லூரி), செல்வி பி.சகலகலாநிதி (அச்சுவேலி ம.வி.), எம்.மரியதாஸ் (யாழ்.மத்திய கல்லூரி).

திருமதி ஜே.குலசிங்கம் (கொக்குவில் இராமகிருஸ்ணா வித்தியாலயம்), எஸ்.புவனேஸ்வரன் (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), எஸ்.கனகராஜா (கொக்குவில் ஞானபண்டித வித்தியாலயம்), ஜி.கே.மரியான் (சென்.றோக்ஸ் வித்தி.), வி.திலகநாயகம் (சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை), செல்வி எஸ்.சுகந்தினி (உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி.).

எம்.ரங்கநாதன் (ஆவரங்கால் நடராஜா ராமலிங்க வித்தியாலயம்), செல்வி ரி.புனிதா (அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை), எம்.எம்.எஸ்.ஜெயக்குமார் (கொழும்புத்துறை சென்.ஜோசப் வித்தியாலயம்).

எஸ்.கோபாலகிருஸ்ணன் (வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்), பீ.லோறன்ஸ் (ஊரெழு கணேசா வித்தியாலயம்), திருமதி மே.பெ.பினய (சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்). (எ-10)

# மக்களுக்காக உயிர்நீத்தோரை தமிழீழ மண் என்றும் மறக்காது

## மாவட்ட அரசியல் துணைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்8

தமிழ் மக்களுக்காக உயிர் நீத்த தியாகிகளை தமிழீழ மண் என்றும் மறவாது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன்.

மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு நேற்றுமுன்தினம் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்திய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று சமாதான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் கூட மாவீரர்களான பொன்.சிவகுமார், மேஜர் முரளி ஆகியோரின் தியாகங்களை இந்தமண் மறந்துவிடாது. இவர்கள் எம் இனத்திற்காகச் செய்த தியாகமே மாணவர் எழுச்சியை இன்று உலகிற்குப் பறைசாற்றி நிற்கிறது. அந்த உயர்ந்த தியாகத்தைக் கண்டு இன்று மாணவர் சமூகம் வீறு கொண்டெழுந்துள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## தேவை

ஏ-9 நெடுஞ்சாலை புனரமைப்புச் செய்யும் கம்பனியில் பின்வரும் வேலையாளர்கள் தேவைப்படுகின்றனர்.

☆ மேசன் ☆ தச்சன் ☆ தார் வேலையாளர்கள்
☆ கம்பி வளைப்பவர்(Bar Bender) ☆ கூலி வேலையாளர்கள்

Project Manager,
A-9 Project Site Office,
Shakkane Engineering (PVT.) Ltd.,
Usan Junction, Kandy Road, Mirusuvil.


(18891)

## ஒப்பந்தகாரர் தேவை

ஏ-9 நெடுஞ்சாலை புனரமைப்பு வேலை செய்யக்கூடிய உப ஒப்பந்தகாரர்களும் பாலம் புனரமைப்புச் செய்யக்கூடிய உப ஒப்பந்த காரர்களும் கீழ்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

Project Manager,
A-9 Project Site Office,
Shakkane Engineering (PVT.) Ltd.,
Usan Junction, Kandy Road, Mirusuvil.

## கூரை ஓடுகள் விற்பனைக்கு



☆ தேனீ மார்க்
☆ சந்திரிக்கா மார்க்,
☆ வரிக்குதிரை மார்க் ஓடுகள்
மற்றும்
☆ செங்கற்கள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

இராஜேந்திரா ஸ்ரோர்
இல.192, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீ ரங்கநாதன் -றேடர்
இல.190, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். (18870)

## இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஒளஷதம்

**சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி**

யாழ்-குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS,
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021 - 222 - 2567

(குறிப்பு:- சந்திரசு சந்திக்கு அண்மையில்) (சி-27866)

## I.E.M.S. (S.T.S.D.U.K.)

(MEMBER OF THE WORLD COMMUNICATION ASSOCIATION)

We have the pleasure to inform the opening of an English medium Pre School. Enrolments Now on...

சர்வதேச ரீதியிலான ஆங்கில பாலர் பாடசாலை
ஆரம்பம் இன்றுமுதல் : (2 முதல் 5 வயது வரை)
★ உங்கள் நேரத்திற்கேற்ப குழந்தைகள் பராமரிக்கப்படுவர்.

**ELOCUTION** I.E.M.S. & LAMDA

Spoken / Written with Grammar வகுப்புகள் நடைபெற்று சர்வதேச ரீதியிலான சான்றிதழ்களும் விஷேட சித்திக்கு கொழும்பில் பரிசுகளும் வழங்கப்படும்.

★ ஆங்கில ★ பிரத்தியேக வகுப்புகள் / Individual Classes எல்லா வயதினருக்கும் உங்கள் வசதிக்கேற்ப நேரம் ஒதுக்கப்படும்.

இடம் :
**I.E.M.S. INSTITUTE,**
டச் றோட், கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

(18485)

## அழகுக்கலை பயிற்சி வகுப்புக்கள்

✱ மணப்பெண் அலங்காரம்
✱ சிகை அலங்காரம்
✱ சாறி டிசைனிங்
✱ முகப்பரு,கரும்புள்ளி போன்றவற்றுக்கு சிகிச்சை.



**திருமதி.நளினி சிவகுமாரன்**
(Principal NalineS Institute of Herbal, Anoma therapy & Beauty Clinic

காலம்:– 14th. 15th June 2003
நேரம்:– காலை 10.00 – 2.00 மணி வரை
இடம்:– 393/48, கோவில் வீதி,நல்லூர்,யாழ்ப்பாணம்
தொலைபேசி:– 365360,503138, 0777– 383846

## கியுபிட் போர்ட் KUPID FORT

(இது ஒரு இந்தியன் தயாரிப்பு) Capsules



பிரசித்தி பெற்ற ஆயுர்வேத மூலிகைகளைக் கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு மாத்திரை. சர்வதேச உலகில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறந்த ஒளஷதம். கியுபிட் போட் கீழ் காணும் பிரச்சினைகளை சீர்செய்யும்.

- ஆண் வீரியமின்மை, மலட்டுத்தன்மையைப் போக்க.
- வயது முதிர்ந்தோரின் பாலியல் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு.
- சாதாரண பாலியல் குறைபாடுகளை சரிப்படுத்த.

100% ஆயுர்வேத மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.
எதுவித பக்க விளைவுகளும் கிடையாது.
கியுபிட் போட் வில்லைகள் தாம்பத்திய வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி.
கியுபிட் போட் என்று பெயர் சொல்லிக் கேட்டு வாங்குங்கள்.

**நாடெங்கிலும் உள்ள சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்**

யாழ்ப்பாணத்திற்கான விநியோக முகவர்:
**ஜெகன் பார்மஸி**
462B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 222-3191

(18780)

## HERO CYCLES in TCA with National Bicycle Ind. Co., Japan

manufacturer of brand bicycle
**National/Panasonic**



R/T 22" Black (Gents)

சர்வதேச ரீதியில் ISO சான்றிதழ் பெற்றதும், இலங்கையில் அதிகமாக விற்பனையாகின்ற சைக்கிள் இதுவே.

யாழ்ப்பாணத்தில்:

ஈஸ்வரன் ட்ரேடர்ஸ், 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
E.சுப்பிரமணியம் அன் கோ, சுன்னாகம்.
V. வெங்கடேஸ்வரா ஸ்டோர்ஸ். 125A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
E.S. பொம்பலம் & கம்பனி, 50, 52 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



Hero Miss India



SLR GOLD 26" (Ladies)

ஜப்பான் தொழில்நுட்பத்துடன் தயாரித்து இறக்குமதி செய்யப்பட்ட நெஷனல்,பெனசொனிக் சைக்கிள்களின் ஏக விநியோகஸ்தர்கள்

**மைனிஸாஸ் ஹாட்வெயார் ஸ்டோர்ஸ்**
74, டாம் வீதி கொழும்பு - 12.
தொலைபேசி: 433727, 423273, 384250 -3.

உதயன்

# மாநாட்டுக்குப் பின் நல்லது நடக்குமா?

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் ஜப்பான் மாநாடு டோக்கியோ அசோகா ஹோட்டலில் நாளை திங்கட்கிழமை காலை ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை அரசின், இணைப்பிரதிநிதிகளாக இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவிருந்த விடுதலைப் புலிகளின் மூத்த பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளமாட்டார்கள் என்பது பெரும்பாலும் நிச்சயமாகிவிட்டதால் மாநாடு தொடர்பான எதிர்பார்ப்பு முன்னரிலும் பார்க்க தணிந்திருக்கிறது.

இலங்கை அரசின், சுமார் முப்பதாயிரம் கோடி ரூபா வெளிநாட்டு உதவி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பும் அப்படியே நிறைவேறுமா என்பதும் நிச்சயமற்றதாக உள்ளது.

டோக்கியோ மாநாட்டில் பங்குபற்றுவதில்லை என புலிகள் தீர்மானித்திருப்பதால் மாநாட்டின் பெறுபேற்றில் பெரும் பின்னடைவு ஏற்பட்டிருப்பதாக அவதானிகள் கூறுகின்றனர்.

வருடம் ஒன்றுக்கு பத்தாயிரம் கோடி ரூபா என்ற அளவில் மூன்று ஆண்டுகளுக்கு முப்பதாயிரம் கோடி ரூபாவை பெற்றுக்கொண்டு நாடு திரும்பலாம் என்று அரசுக் குழு எண்ணியிருக்கக்கூடும்.

இலங்கையில் சமாதான சூழல் நிலவுகின்ற ஒரு நிச்சயமான நிலைமையின் மத்தியில் பெருமளவு சர்வதேசு நிதி உதவி கிடைக்க இருப்பது இதுவே முதல் தடவை.

யுத்தத்துக்கு முடிவுகட்டி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகளில் ஒரு நல்ல திருப்புமுனையாக டோக்கியோ மாநாடு அமையும் என்ற எதிர்பார்ப்பு இப்போது பொய்த்துப் போயிருப்பது அனைவருக்குமே ஏமாற்றமளிப்பதாய் உள்ளது.

யுத்தத்தால் பேரழிவுகளைச் சந்தித்துள்ள வடக்கு - கிழக்கில் அவசர மனிதாபிமான மற்றும் புனரமைப்புப் பணிகளைத் தடையின்றி விரைந்து மேற்கொள்வதற்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று அவசியம். அந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பில் முக்கிய - அதிக - பங்களிப்பு விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

இந்த இரண்டு அடிப்படை விடயங்களையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு பிரதமர் சர்வதேச சமூகத்தின் நிதி உதவியை நாடி டோக்கியோ சென்றிருக்கிறார்.

இன்றைய நிலையில் வடக்கு - கிழக்கிற்கு பயன் தரத் தக்கது இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத்தான் என்பதை பல வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஏற்றுக்கொண்டாலும் அத்தகைய ஒரு கட்டமைப்பை உருவாக்குமாறு சர்வதேச நாடுகள் அரசுக்கு அழுத்தம் கொடுக்க பின்னிற்கின்றன.

தேர்தல் காலம் முதல் வாக்குறுதி அளித்து வந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு விடயத்தை செயற்படுத்துவதில் பிரதமர் காட்டும் நழுவல் போக்கும் இது விடயத்தில் அரசு பக்கம் அழுத்தங்களைப் பிரயோகிக்க முக்கிய நாடுகள் பின்னடிப்பதும் விடுதலைப் புலிகளைக் கவலை கொள்ளச் செய்திருக்கின்றன.

நாட்டுக்குத் தேவையான நிதியைத் திரட்டுவதற்கு புலிகளைப் பங்காளிகளாகக் காட்ட விரும்பிய ரணில், அந்த நிதியை வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு பங்கிட்டுச் செலவு செய்வதில் புலிகளை ஓரங்கட்டிவிட நினைக்கிறாரா?

இப்படி ஒரு எண்ணம் தமிழ் மக்கள் மனங்களில் மேலோங்கி இருக்கிறது.

கொழும்பு செய்தி ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் இந்தக் கருத்தையே கோடிகாட்டியிருக்கிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழக்கத் தொடங்கிவிட்டனர். புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்ட சமயம் நாம் பார்த்த ரணில் விக்கிரமசிங்கவை இன்று காணவில்லை. இந்த உணர்வு தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

- இவ்வாறு தமிழ்ச்செல்வன் அந்தப் பேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார்.

டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டுக்குப் பின் சமாதான முயற்சிகள் என்னவாகும், எப்படித் தொடரும் என்ற கேள்வி பலரிடமும் எழவே செய்கிறது.

டோக்கியோ மாநாட்டிலிருந்து திரும்பியதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதான முயற்சிகளை புதிய அணுகு முறையுடன் உத்வேகமாக முன்னெடுக்க இருக்கிறார் என்று கொழும்பில் அரசு சார்பு ஊடகங்கள் தெரிவித்திருக்கின்றன.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு விவகாரத்தில் இருந்தே இனி எதிர்கால சமாதான முயற்சிகள் தொடங்கப்படுகின்ற நிலைமை உருவாகி இருப்பதால், இனி சமாதான நகர்வில் முதலில் அடி எடுத்து வைக்க வேண்டிய தரப்பாக அரசுதான் உள்ளது.

டோக்கியோ மாநாட்டை முடித்துக் கொண்டு திரும்பியதும் பிரதமர் நல்ல அடி எடுத்து வைப்பாரா? இதுவே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

## ஏ-9 வீதியில் போக்குவரத்து அதிகரிப்பு

# வேகக் கட்டுப்பாட்டை அனுசரிக்க காவல்துறை மீண்டும் கோரிக்கை

கிளிநொச்சி,ஜூன்8

ஏ-9 வீதியூடாகப் பயணத்தை மேற்[illegible]ள்ளும் வாகனங்கள் அனைத்தும் வேகக் கட்டுப்பாட்டைக் [illegible]டைப்பிடிக்க வேண்டும் என்று தமிழீழ காவல்துறைப் பணிமனை மீண்டும் அறிவித்துள்ளது.

அண்மைக்காலமாக இந்த வீதியில் விபத்துக்கள் அதிகரித்து வருவதை அடுத்து இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் -

வேகக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்காதவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் - காவல்துறையினர் அறிவித்துள்ளனர்.

இது குறித்து மேற்படி பணிமனையின் சார்பில் தெரிவிக்கபட்டிருப்பதாவது:-

மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள இடங்களில் 30 கிலோமீற்றர் வேகத்திலும், ஏனைய இடங்களில் 50 கிலோமீற்றர் வேகத்திலும் வாகனங்களைச் செலுத்தலாம். அத்துடன், போக்குவரத்து விதிகளைப் பேணவேண்டும்.

வாகனம் செலுத்துநர்களின் அசமந்தப்போக்கினால் வீணான உயிரிழப்புகளும், அங்க இழப்புகளும் ஏற்படுவதைத் தடுப்பதற்கு சகல வாகனம் செலுத்துநர்களும் போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அத்துடன், சைக்கிள்களில் பயணிப்போர் சமாந்தரமாகச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும். அவ்வாறு செல்வோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்று கூறப்பட்டது.

(எ-10-ரி)

## நாட்டு நடப்பு

### எம் பண்பு அழியவில்லை.

அப்புவும் ஆச்சியும் அன்று
அருமையாய் தலைமயிர் வளர்த்து
செப்பமாய் குடுமி கட்டி
சிறப்புற வாழ்ந்தார் அன்றோ
இப்பவும் இந்த பண்பு
இறந்திடவில்லை என்பேன்
கப்பலால் வந்த தம்பி
கனகரின் கடைசிப் பேரன்
அப்பு போல் தலை முடித்து
அருமையாய் கடுக்கன் பூண்டு
செப்பிலே காப்பு மாட்டி
திரிகிறான் பட்டினத்திலின்று
அப்பனே! களிசான் விட்டு
அருமையாய் வேட்டி கட்டில்
இப்புவியில் எமது பண்பு
இழிவுபட்டழியா தென்பேன்

- விகடகவி.

# பாதுகாப்பு வலயம் அகலும்வரை அகதிவாழ்வே எமக்குக் கதியா?

## பல்கலை மாணவரிடம் பொதுமக்கள் கேள்வி

யாழ்ப்பாணம்,ஜூன்8

உயர்பாதுகாப்பு வலயங்களில் மாற்றம் செய்யப்படாத வரையில் அகதி வாழ்வே எமக்குக் கதியாக இருக்கப் போகின்றது.

- இவ்வாறு தம்மைச் சந்தித்த பொதுமக்கள் தெரிவித்தனர் என்று யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் செய்திக்குறிப்பொன்றில் தெரிவித்துள்ளது.

இது குறித்து மேற்படி ஒன்றியம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அகதிவாழ்வின் அவலங்களையும் கொடுமைகளையும் நேரில் பார்க்கும் போது விரைவில் அதற்கு முடிவு கட்டவேண்டும் என்ற உணர்வே எழுகின்றது. இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்கள் தமது சொந்த இடத்துக்குச் செல்ல வேண்டும் என்ற ஆவலோடு இருந்து வருகிறார்கள். முகாமகளில் வாழும் மக்களின் கருத்துக்களை அறியச் சென்ற பல்கலைக்கழக மாணவர்களின் மனதை உருக்கிய சம்பவங்களும் உண்டு.

"நான் இறந்தாலும் என்னை எரிக்க என்னுடைய பிள்ளைகளிடம் பணம் இல்லை" என்று கண்ணில் கண்ணீர் வடித்தவாறு ஒரு வயோதிபத் தாய் சொன்னார். "நாங்கள் எங்களின் சொந்த இடமான தெல்லிப்பழையில் நல்ல வீடு வசதிகளுடன் இருந்தோம். இங்கு நாலு தகரங்கொண்ட ஒரு சிறுகுடிசையில் இருக்கின்றோம். அண்மையில் பெய்த கடும் மழையாலும் காற்றாலும் எங்கள் குடிசையும் காற்றுடன் போய்விட்டது. இதனால், நானும் எனது பிள்ளைகளும் மழையிலும் காற்றிலும் தோய்ந்தபடி பக்கத்து வீட்டில் போய் இருந்தோம். இன்று வரையும் காற்றால் உடைந்த எமது குடிசையை திரும்ப அமைக்க என்னால் முடியவில்லை" - என்றார்.

இவ்வாறு மக்கள் தொடர்ந்து தமது பிரச்சினைகளைக் கூறி இவற்றுக்கு தீர்வுகாண இங்குள்ள ஆக்கிரமிப்புப் படையை இங்கிருந்து அகற்ற வேண்டும் என்றும் -

அதற்கு எப்போதாயினும் எங்காயினும் எந்நேரமாயினும் எவ்வாறான சூழலிலும் எழுச்சி நிகழ்வுக்கு அணிதிரள்வோம் என்றும் -

தெரிவித்துள்ளனர்.

(எ-10)

## இளைய தலைமுறையினர் மத்தியில் பெருகிவரும்

# புகைப்பிடித்தலை தடைசெய்ய ஒன்றிணைந்த செயற்பாடு தேவை

## சங்கானை வைத்திய அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்8

இளைய சந்ததியின் மத்தியில் அதிகரித்து வரும் புகைப்பழககத்தை தடுக்க ஒன்றிணைந்த செயற்பாடு தேவை.

- இவ்வாறு தெரிவித்தார் சங்கானை அரசினர் ஆஸ்பத்திரி பொறுப்பதிகாரி டாக்டர் ஏ.யோகராசா.

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் ஏற்பாடு செய்த புகைப்பொருள் எதிர்ப்பு தின நிகழ்வுகள் அண்மையில் அளவெட்டி கும்பலை பாரதி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

சம்மேளத் தலைவர் சி.இராசசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புகைக்கும் பழக்கமுடையவர்களுக்கு சுவாசப் புற்றுநோய்கள், சிறுநீரகப் புற்றுநோய்கள், பாலியல் பலவீனம் என்பன ஏற்படக்கூடிய சாத்தியம் உள்ளதாக வைத்திய ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

ஆகவே, உடல் நலத்திற்கும் சுற்றாடலுக்கும் கேடு விளைவிக்கவல்ல புகைத்தல் பழக்கம் மக்கள் மத்தியிலிருந்து முற்றாக ஒழிக்கப்படவேண்டும்.

ஒருவர் புகைக்கும்போது 25வீத புகையை அவர் தமது உடலினுள் உள்வாங்குகின்றார். மீதியான 75வீத புகையும் காற்றுடன் கலந்து சுற்றாடலில் உள்ளவர்களைச் சென்றடைகின்றது.

காற்றுடன் கலக்கும் இப்புகையில் 'நிக்கொட்டின்' எனப்படும நஞ்சும் வேறு இரசாயனப் பொருள்களும் இருப்பதால் புகைக்காத ஏனையோருக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது

இன்று புகைத்தலானது பீடி, சுருட்டு, சிகரெட் போன்ற பல்வேறு முறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உலக நாடுகள் பலவற்றில் சிகரெட் தொடர்பான விளம்பரங்கள் சட்டம் மூலம் தடைசெய்யப்பட்டுள்ளன.

எமது வருங்கால சந்ததி புகைத்தல் பழக்கத்தினால் ஏற்படும் தீங்குகளையும் உடல்நலப் பாதிப்புகளையும் நன்குணர்ந்து கொள்வதற்கு இது போன்ற விழாக்கள் பேருதவியாக இருக்கும்.

மது அருந்தும் பழக்கம், சிகரெட் மற்றும் பீடி, சுருட்டு புகைக்கும் பழக்கம் எமது இளம் சந்ததியினரிடையே ஏற்படுவதைத் தடுப்பதற்கு பெற்றோர்களும் மற்றும் சமூக நலன் விரும்பிகளும தீவிர கண்காணிப்பை செலுத்த வேண்டியது அவசியம்.

கிராம ரீதியாக தீவிர பிரசார நடவடிக்கைகளும் மேற்படி சம்மேளனத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றார்.

(எ-135)

### நாளை

வைகாசி 26
திங்கட்கிழமை
09.06.2003
திதி : நவமி
முற்பகல் 7.19 வரை
நட்சத்திரம் : அத்தம்
பின்னிரவு 2.46 வரை
சுபநேரம் : 11.52-1.22
ராகுகாலம் : 7.22-8.52
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

மூடனின் இதயம் அவன் வாயில் இருக்கிறது. அறிஞனின் வாய் அவன் இதயத்தில் இருக்கிறது.

# சட்டவிரோத மின்பாவனையைத் தடுக்க வடமராட்சியில் திடீர் பரிசோதனை!

வடமராட்சிப் பிரதேசத்தில் சட்ட விரோத மின்பாவனையைக் கட்டுப்படுத்த இலங்கை மின்சார சபையின் பருத்தித்துறை அலுவலக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக இரவு வேளைகளில் கிராமம் கிராமமாக பொலீஸாரின் உதவியுடன் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வடமராட்சியின் பல்வேறு பகுதிகளிலும் சட்ட விரோத மின்பாவனை அதிகரித்திருப்பதால் தமக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மின்பாவனையாளர்கள் பலரும் இலங்கை மின்சாரசபையின் பருத்தித்துறை அலுவலகத்துக்கு புகார் செய்திருந்தனர் என்றும -

சட்ட விரோத மின்பாவனையைக் கட்டுப்படுத்த திடீர் பரிசோதனை நடவடிக்கைக்கு உதவுமாறு இலங்கை மின்சார சபையின் பருத்தித்துறை பொறுப்பதிகாரி எஸ்.செல்வச்சந்திரன் வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள பொலீஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளைக் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, குறித்த நடவடிக்கைகளுக்கு தாம் ஒத்துழைப்பு வழங்குவதாகப் பொலீஸ் பொறுப்பதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என்றும் - கூறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மின்சார சபை அதிகாரிகளும், பருத்தித்துறை பொலீஸாரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையால் பருத்தித்துறை நகரில் சட்ட விரோத மின்பாவனையில் ஈடுபட்ட 8 பேர் வகையாக அகப்பட்டுக் கொண்டனர்.

இவர்கள் சட்ட விரோத மின்பாவனைக்கு பயன்படுத்திய மின்சார வயர்களும், மின்சார பாவனைப் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன. சட்ட விரோத மின்பாவனையில் ஈடுபட்ட 8 பேரும் பருத்தித்துறை நீதிவான் அ.பிரேம்சங்கர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது தமது குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

இதனையடுத்து, 8 பேருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், மின் உபகரணப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டு எச்சரிக்கையும் செய்யப்பட்டனர். (எ-173)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 18 - 12 - 1918 |  | 23 - 04 - 2002 |

## அமரர் கார்த்திகேசு முருகப்பா

(இளைப்பாறிய ஆசிரியர்)

அன்புமொழி பேசி ஆதரவாய் வழிகாட்டி
இன்ப வாழ்வு வாழ வழிவகுத்த ஆசானே!
ஆண்டொன்று சென்றாலும் ஆறாது எம்முள்ளம்
ஈண்டுமை நினைந்தே இவ்வுலகில் வாழுகின்றோம்.

கச்சாய் வடக்கு, கொடிகாமம். (18880) — என்றும் உங்கள் நினைவில் வாழும்: குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 27 - 08 - 1930 |  | 09 - 05 - 2003 |

## திருமதி கிருஷ்ணசாமி பரமேஸ்வரி

எமது குடும்பத்தின் குலவிளக்காக விளங்கிய திருமதி கிருஷ்ணசாமி பரமேஸ்வரி அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியைகளும் புலோலி வடக்கு, தெணி அம்மன் ஆலய மடத்தில் இன்று (08-06-2003) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
இளையமகன்: கி.இரவீந்திரன் (சின்னக்குட்டி)

இரண்டாம் குறுக்கு வீதி,
பருத்தித்துறை. (18882)

# Documentation/ Typist Clerk

**(Jaffna & Vavuniya Branches)**

Ceylinco Insurance, the leading private sector insurance Company is seeking personnel for the above posts for their branches in Jaffna and Vavuniya.

The ideal candidates should possess good typing skills, with the ability to handle clerical duties and documentation.

**Age:** Below 30 years.

**Qualifications:** GCE A/Levels and GCE O/Levels with credit passes in English and Mathematics.

Candidates should be computer literate.

**Experience:** Previous work experience would be advantageous.

**Remuneration:** An attractive salary plus medical reimbursement, health insurance, annual bonuses and other benefits.

Please forward your applications with the post applied for marked on the top-left-hand corner of the envelope to reach the undersigned within 10 days of this advertisement.

Assistant General Manager - Central
**CEYLINCO INSURANCE CO. LTD.**
5th Floor, "Ceylinco House",
69, Janadhipathi Mawatha, Colombo 1.

# தேவை

வைத்திய உத்தியோகத்தர் பகுதிநேரம்/முழுநேரக் கடமைகளுக்குத் தேவை.

தொடர்பு:
வைத்திய பணிப்பாளர்
**சென்றல் நேர்சிங் ஹோம்**
350, பலாலி வீதி,
திருநெல்வேலி.
(18849)

# தேவாலயத்தில் ஒலிபெருக்கி திருட்டு

சில்லாலை புனித யாகப்பர் தேவாலயத்தில் இரவு வேளையில் ஆலய ஜன்னலைப் பிரித்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த ஒலிபெருக்கி கருவிகள், ஆலய அலங்காரப் பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு நடைபெற்ற இத்திருட்டுச் சம்பவம் பற்றி, ஆலய பங்குச் சபையினரும், சில்லாலை பங்குத்தந்தையும் இளவாலைப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். சுமார் 50ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டை அடுத்து பொலீஸார் இந்த ஆலயத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர் (எ-135)

# சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும் - இதோ, நாம் வழங்கும் அரிய சந்தர்ப்பம்

எமது நிறுவனம் தற்போது நாடு முழுவதிலும், சகல கிராமம் மற்றும் நகரத்தையும் உள்ளடக்கும் வகையில் விற்பனைப் பிரதிநிதி, வியாபார வலைப்பின்னலை விரிவுபடுத்தும் நடவடிக்கையை ஆரம்பித்திருப்பதால்......... மிக உயர்தரப் பாவனை கொண்ட கணனி மற்றும் மொனிற்றர் ஆகியவற்றை இறக்குமதி செய்து விநியோகிக்கும் இலங்கையின் பிரபலமிக்க நிறுவனமான எமது நிறுவனத்தில் இணைந்துகொள்ள பெரியவர்கள் மற்றும் சிறியவர்கள் சகலருக்கும் அரியதொரு சந்தர்ப்பம்.

இதற்காக........
கீழ்க்காணும் தகுதிகளை நீங்கள் கொண்டுள்ளீர்களா?

1. *கணனி பற்றிய அறிவும், விற்பனைத் திறமையும்.*
2. *வாடிக்கையாளர்களுக்கு அதிசிறந்த சேவையை வழங்குவதற்கான திறமை.*
3. *சொந்தமாக வியாபாரமொன்றை நடத்தவோ, ஆரம்பிப்பதற்கோவான விருப்பம்.*

மேற்கூறிய வினாக்களுக்கு உங்கள் பதில் 'ஆம்' என அமையுமானால்.....!
கீழ்க்காணும் விவரங்களை உள்ளடக்கிய உங்கள் விண்ணப்பங்களைத் தயார் செய்யுங்கள்.

(1) பெயர் (2) விலாசம் (3) தொலைபேசி இலக்கமும் தொலைநகல் இலக்கமும்
(4) பிரதேச செயலர் பிரிவும், மாவட்டமும்.

உங்கள் விண்ணப்பங்களை 2003 ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னா அனுப்பி வைக்கவும். உங்கள் விண்ணப்பத்துடன் உங்களது சுயவிலாசமிடப்பட்டதும், முத்திரை ஒட்டப்பட்டதுமான தபால் உறையையும் அனுப்பி வைக்கவும்.

| | |
|---|---|
| நிர்வாக இயக்குநர், | **Managing Director,** |
| அரலிய இன்ரர்நஷனல், | **Araliya International,** |
| கொம்பியூற்றர் (பிறைவேட்) கம்பனி, | **Computer (Pvt.) Company,** |
| இலக்கம் 76, கர்மாந்தபுர, | **No: 76, Karmandapura,** |
| கட்டுவான றோட், ஹோமகம. | **Katuwana Road, Homagama.** |

தொலைபேசி இல. 894848
074-408630 074-442634
தொலைநகல்: 074-408631 ஈமெயில்: Vikumi@slt.lk (சி-28266)

# யாழ் நகரில் SPOT ADMISSION!!!

**திகதி : 14 ஆம், 15 ஆம் திகதி June மாதம் 2003**

## இந்தியாவில் கல்வி பயிலுங்கள்

பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட கார்டன் சிட்டி கல்லூரி

கார்டன் சிட்டி கல்லூரியின் அனுமதி பெற்ற இலங்கையின் ஒரே இணைப்பாளர் திருமதி நளினி சிவகுமாரன்

**2003 ஆண்டு அனுமதி**

| பாடநெறி | | காலம் |
|---|---|---|
| B.Sc. Computer Science | B.Sc.(Comp) | 3 வருடம் |
| Bacherlor of Computer Application | B.C.A. | 3 வருடம் |
| B. Com Computers | B.Com.(Comp) | 3 வருடம் |
| Bacherlor of Business Management | B.B.M. | 3 வருடம் |
| Bacherlor of Hotel Management | B.H.M. | 4 வருடம் |
| B.A. Jounalism | B.A.(Jour) | 3 வருடம் |
| B.Sc. Fashion & Apparel Design | B.Sc.(F.A.D) | 3 வருடம் |
| B.Sc. Microbiology | B.Sc.(Micro) | 3 வருடம் |
| B.Sc. Genetics | B.Sc.(Gen) | 3 வருடம் |
| B.Sc. Biotechnology | B.Sc.(Biotech) | 3 வருடம் |
| | | 4 வருடம் |
| Master of Business Administration | M.B.A. | 2 வருடம் |
| Master of Turism Administration | M.T.A. | 2 வருடம் |
| Master of Social Work | M.S.W. | 2 வருடம் |
| Master of Computer Application | M.C.A. | 3 வருடம் |
| M.Sc. Microbiology | M.Sc.(Micro) | 2 வருடம் |
| Master of Physiotherapy | M.P.T. | 2 வருடம் |
| M.Sc. Biochemistry | M.Sc.(Biochem) | 2 வருடம் |
| M.Sc. Bio-Technology | M.Sc.(Biotech) | 2 வருடம் |

அனுமதிக்கு தேவை :-
க.பொ.த. (சா.த) சான்றிதழ், க.பொ.த. (உ.த) சான்றிதழ்
பாடசாலை மாணவர் தேர்ச்சி அறிக்கை.
தேசிய அடையாள அட்டை - போட்டோ பிரதி
கடவுச்சீட்டு நிழல் படம் - 4, முத்திரை அளவு நிழல்படம் - 4.

பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் உயர் தர வகுப்பு மாணவர்களும் 100 டொலர்களை அல்லது 10,000/- ரூபாவை பதிவுக்கட்டணமாக செலுத்தி தற்காலிகமாக பதிவு செய்து கொள்ளலாம் பரீட்சைப் பெறுபேறுகள் போதாத நிலையில் பதிவு வைக்கப்பட்ட பணம் முழுவதும் மீளளிப்பு செய்யப்படும்

*உங்கள் அனுமதிகளை முன்கூட்டியே பதிந்துகொள்ள தொடர்பு கொள்ளவும்.*

**திருமதி நளினி சிவகுமாரன்**
**இடம்: 393/48, கோயில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி: 365360, 503138, 0777-383846**

# இந்துப் பண்பாட்டின் பன்மைத்தன்மையை புலமை சார்ந்து பதிவுசெய்த கண்காட்சி

மட்டக்களப்பு விபுலானந்தா இசை நடனக் கல்லூரியில் கடந்த மாதம் 6ஆம் 7ஆம் திகதிகளில் நடைபெற்ற இந்துப் பண்பாடு தொடர்பான கண்காட்சி குறித்த ஒரு பார்வை இது.

மனித வாழ்வின் போக்கும், உழைப்பும், சிந்தனையும் பண்பாட்டு எச்சங்களை உருவாக்குகின்றன. காலப்போக்கில் இவை மெருகூட்டப்பட்டு, புதுமை மணம்பெற்று, மாற்றங்களுக்குள்ளாகி புதிய பண்பாடாக உருவம் பெறுவது யதார்த்தம். பல்வேறு மனிதக் குழுமங்கள் பல்வேறு புவியியல், காலநிலை, வளங்களின் பின்னணியில் பல்வகைப் பண்பாட்டை உருவாக்கி வருவதும் வரலாற்று யதார்த்தம். இவை தமக்குள் கொண்டும் கொடுத்தும் (Assimilation and Acculturization) பல்வகைப் பரிமாணம் கொண்டதாய் அமைவதும் யதார்த்தம். அவ்வகையில் இந்துப் பண்பாடு ஒரு பல்வகைத் தன்மையதாய், பன்மைத் தன்மையைதாய் அமைந்துள்ளவாற்றை மட்டக்களப்பு விபுலானந்தா இசை நடனக் கல்லூரியில் கடந்த மாதம் 06, 07, 08 ஆம் திகதிகளில் இடம்பெற்ற கண்காட்சி பறைசாற்றி நின்றதை இங்கு பதிவு செய்வது சாலப் பொருத்தமானது.

இந்துப் பண்பாடு ஒற்றைப் பரிமாணம் கொண்டதல்ல. பொதுவாகவே ஆறு சமயங்களின் கூட்டு என்பர் அறிஞர். சைவம், வைணவம், சாக்தம், என்பவற்றோடு ஆகமம் சாராத பல்வேறு வழிபாட்டு முறைகளும் இன்றும் இந்து மத பிராந்தியத்தில் பயில் நிலையில் உள்ளதை ஈழமெங்கும் ஒருவர் அவதானிக்கலாம். மாரியம்மன் வழிபாடு, கண்ணகை அம்மன் குளுர்த்தி சடங்கு, மடை போடுதல், தீ மிதிப்பு, பொங்கல் மடை, அண்ணமார் வழிபாடு இளந்தாரியன் மடை, பேச்சி அம்மன பொங்கல் எனப் பல வழிபாட்டு முறைகள் யாழ்ப்பாணக் கிராமங்களிலும் வன்னிப் பிரதேசங்களிலும், கிழக்கிலும் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்திலும் பரவலாகக் காணப்படுகின்றன. ஆரியமயமாக்கல் காரணமாக ஆகம முறையிலான கோயில்களாக பேச்சியம்மன், நாச்சியார், வைரவர் கோயில்கள் மாறிவிடுவதனால் பண்டைய வழிபாட்டு முறைகள் ஈழத்தில் அருகி வருகின்ற போதும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அவை இன்றும் பயில் நிலையிலுள்ளதைக் கண்காட்சி சுட்டிநின்றது.

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களின் வழிகாட்டலில் புராதன வழிபாட்டு வேட்டுவ முறையில் இருந்து நவீன காலத்து சாயி பாபா வழிபாடுவரை கண்காட்சி ஒரு புலமைசார் கண்ணோட்டத்தில் கட்டமைக்கப்பட்டு இருந்தமை சிறப்பான அம்சமாகும். வில், அம்பு வழிபாடு செய்யும் குமார தெய்வ வழிபாடு இன்றும் கிழக்கில் காட்டுப் பகுதிகளில் காணப்படுகின்றது. வேட்டுவ வாழ்விலிருந்து மந்தை மேய்ப்புக்கு மனித குலம் மாறியபோது வதனமார் வழிபாடு ஏற்பட்டது. கைக்கோடரி வழிபாடும், பின்னர் விவசாயப் பண்பாட்டில் கும்ப வழிபாடும் வழக்கத்துக்கு வந்திருந்தன. குமாரத்தன் பந்தல், வைரவர் பந்தல் என ஒழுங்கமைக்கப்பட்ட கண்காட்சி முகம் மட்டும் வழிபடும் முகக்களை வழிபாட்டையும், தொடர்ந்து சிலை வழிபாட்டு முறைகளையும், காட்சிக்கு வைத்திருந்தது.

புராதன சிலை வடிவங்கள், கோயில் பொருள்கள் இவற்றோடு காளி அம்மன் முகங்களை அடுக்குச் சாத்தலுடன், நாக கன்னி வழிபாட்டுப் பொருள்களுடனும், கண்ணகி வழிபாட்டில் இடம்பெறும் வடசேரி, தென்சேரி கொம்புகளுடனும், ஆகம வழிபாட்டுப் பொருள்களுடனும் கண் காட்சி விரிவாக வடிமைக்கப்பட்டிருந்தது பாராட்டுக்குரியது. திரௌபதை அம்மன் வழிபாட்டுமுறை தனி அமைப்பாகக் காணப்பட்டது. அம்மனை காய், கனி, இளநீர் பொருள்களில் உரு அமைப்புச் செய்திருந்தார்கள். கப்புகனார், பூசாரி, குருக்கள், ஐயர் என பூசகர் வரிசையும் பல்வகைத் தன்மையுடையதாகக் காணப்படுகிறது.

இவற்றோடு நவீன காலத்து இராம கிருஷ்ண மிஷன், பிரம்மகுமாரிகள் சங்கம், சாயி வழிபாடு, காயத்திரி பீடம் என வரலாற்றுப் பார்வை விரிந்திருந்தது. விஞ்ஞான அறிவியல் நோக்கோடு இந்து மதத்தின் சோதிடம், வசியம், மனையடி சாஸ்திரம் (வீடு அமைக்கும் முறை) என்பனவும் மனிதனின் பிறப்பு முதல் தோடு குத்துதல், பெண் ருதுவாகும் சடங்கு, திருமணம், மரணச்சடங்கு முறைகள் என்பனவும் யதார்த்தம் தொற்றும் வகையில் காட்சியில் இணைக்கப்பட்டிருந்தன. ஈமச்சடங்கு சுடலைக்காட்சியை நினைவுக்குக் கொண்டு வந்தது. ஈற்றில் உலக்கையைக் கடந்துதான் பார்வையாளர் வெளியேறவேண்டி இருந்தது.

மேலும், இந்துமதம் சார்ந்த கலைகள், பறை மேளம் முதல் தவில் வரையிலான வாத்தியக் கருவிகள், கூத்து முதல் பரதம் வரையான காட்சிகள் செயல்முறையிலும் பார்வையாளரை ஈர்த்தன. சோதிடம், வசியம் பற்றிய செயல் விளக்கங்கள் சிறப்பாக வழங்கப்பட்டன. இந்து மதம் சார் புத்தகங்கள், ஆய்வேடுகள், துண்டுப் பிரசுரங்கள் என நூற் கண்காட்சியாகவும் இது விஸ்தரிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்க அம்சம்.

இந்துப் பண்பாடு என வெற்றுக் கோஷம் போடுவதும், மதமாற்றம் என மக்கள் மத்தியில் மதவெறியைத் தூண்டுவதும் போன்ற பேச்சுகள் செயற்பாடுகளை விடுத்து உலக இந்து மாநாட்டின் பின்னணியில் இது போன்ற வரலாற்று, விஞ்ஞான, சமூகவியல், மானுடவியல் கண்ணோட்டத்தோடு கூடிய புலமைசார் பார்வையும், பன்மைப் பண்பாட்டை வலியுறுத்தும் அறிவுசார் நடவடிக்கைகளும் எம்மத்தியில் அவசியமானவை. இந்தப் பரந்த உலகில் 'நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம்' என மன நிறைவு அடைவதும் பன்மைப் பண்பாட்டுக்குரிய அங்கீகாரத்தைச் சகல மனிதக் குடும்பத்தினர்க்கும் வழங்குவதுமே இந்துப் பண்பாட்டின் வீரியமும் பலமும் என்பதை இக்கண் காட்சி வலியுறுத்தியது என்றால் மிகையாகாது. ★

**கந்தையா ஸ்ரீகணேசன்**

# மாணவர்களின் எண்ணங்கள் புதுப்பொலிவு பெறவேண்டும்

## கலாநிதி சண்முகலிங்கன் கூறுகிறார்

மாணவர் எழுச்சி நாளில் மாணவர்கள் ஒவ்வொருவரினதும் எண்ணங்கள், உணர்வுகள், செயல்கள் யாவும் புதுப்பொலிவுடன் அமைய வேண்டும். புத்தகப் பூச்சிகளாக இல்லாமல் தெளிவான சிந்தனையுள்ளவர்களாக அவர்கள் மாறவேண்டும்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி திறந்த வெளியரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தமிழ் மாணவர் எழுச்சி நிகழ்வில் கலந்து சிறப்புரை நிகழ்த்திய யாழ்.பல்கலைக்கழக அரசியல், சமூகவியல் துறைத் தலைவர் கலாநிதி என்.சண்முகலிங்கன் இவ்வாறு தெரிவித்தார்.

தென்மராட்சி தமிழ் மாணவ ஒன்றியத் தலைவர் மா.மதிவண்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது விதியை நாமே தீர்மானிக்க வேண்டும். எங்கள் மேம்பாடு, வளர்ச்சி அதனுடன் கூடிய திட்டங்கள் யாவும எம் கையில் தங்கியுள்ளன. அதற்காக நாம் பாடுபடல் வேண்டும்.

சமூகத்தில் பிரகாசிக்கும் மாணவர்கள் எதிர்காலத்தின் சிற்பிகள். எனவே, மாணவர்கள் தீய வழிகளில் செல்லாது நல்ல எதிர்காலப் பாதையை நோக்கிச் செல்லவேண்டும்.

சமூகத்தில் எத்தனையோ தீய பழக்கவழக்கங்கள் காணப்படுகின்றன. அவற்றில் வீழ்ந்துவிடாது தப்பிவிடவேண்டும். இதற்கு எம் மத்தியில் உள்ள மாணவர்கள் எழுச்சி கொள்ள வேண்டும்.

மாணவர்கள் உலக விடயங்களை - சமூக விடயங்களை உன்னிப்பாக ஆராய்ந்து செயற்பட்டுத் தம்மை சமூகத்தில் நற்பிரஜைகளாகப் பிரகாசிக்கச் செய்யவேண்டும் - என்றார்.

யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் இ.கைலைநாதன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

நிகழ்வில் பெரும் திரளான மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். மாணவர்களின் எழுச்சி ஊர்வலம் மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய முன்றலில் இருந்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி வரை இடம்பெற்றது. (எ-31)

# விவசாய டிப்ளோமா கற்கைக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்8

இலங்கை விவசாயக் கல்லூரிகளில் விவசாய டிப்ளோமா கற்கை நெறியைத் தொடர்வதற்கான விண்ணப்பங்கள் விவசாயத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன.

இதன்படி எதிர்வரும் 30ஆம் திகதியன்று 17 வயதுக்குக் குறையாமலும் 25 வயதிற்கு மேற்படாமலும் உள்ள ஆண், பெண் இருபாலாரும் மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், விரிவாக்கப் பயிற்சிப் பிரிவு, த.பெ.இல. 18, விவசாயத் திணைக்களம், பேராதனை என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விண்ணப்பம் தொடர்பான விவரங்கள் கடந்த 6ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளன. வர்த்தமானியின் பிரதியை யாழ்.கஸ்தூரியார் வீதியில் உள்ள 'அருணாஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டில்' அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

மேற்படி ஆள்சேர்ப்புக்கான பரீட்சை நடைபெறும் மாவட்டங்களாக யாழ்ப்பாணம், அநுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, கொழும்பு, காலி, கண்டி, குருநாகல், மாத்தறை, திருகோணமலை, வவுனியா, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை என்பன வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளன. (எ-10)

# இயல்பு வாழ்வை உருவாக்கத் தவறிய அரசு டோக்கியோவில் பெறும் நிதியை தமிழ்ப் பகுதிகளுக்கு பயன்படுத்துமா?

## கேள்வி எழுப்புகின்றார் தீவக அரசியற்றுறைப் பொறுப்பாளர்

ஊர்காவற்றுறை,ஜூன்8

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் இயல்பு வாழ்க்கையை தோற்றுவிக்கத் தவறிய அரசு, டோக்கியோவில் பெறப்படும் நிதியைப தமிழர் பிரதேசங்களுக்குப் பயன்படுத்த முன்வருமா?

- இவ்வாறு கேள்வி எழுப்பினார் தீவக அரசியல் துறைப் பொறுப்பாளர் அருந்தவம்.

ஊர்காவற்றுறை திறந்தவெளி அரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாணவர் எழுச்சி தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களது அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யாது அவர்களது கோரிக்கைகளைத் தட்டிக் கழித்து வெறும் சமாதானச் சூழலை நீண்ட நாள்களுக்கு இழுத்துச் செல்வதன் மூலம், விடுதலைப் புலிகள் தொடர்பாக தமிழ்மக்கள் மத்தியில் அதிருப்தியைத தோற்றுவிக்க முயல்வதுடன், போராளிகளையும் இயக்கத்திலிருந்து அன்னியப்படுத்திவிடலாம் என ஸ்ரீலங்கா அரசு தப்பபிப்பிராயம் கொண்டுள்ளது.

வரலாறுகளே எமக்கு தொடர்ந்து வழிகாட்டியாகவுள்ளன. எனவே, கடந்த காலங்களில் தமிழர்கள் இலகுவாக ஏமாற்றப்பட்டதுபோல் தொடர்ந்து ஏமாற நாம் தயாரில்லை.

பல்லாயிரக்கணக்கான போராளிகளையும், மக்களையும் இந்தப் போராட்டத்தின்மூலம் நாம் இழந்தது டோக்கியோவில் வழங்கப்படும் நிதி உதவிகளைப் பெறுவதற்காக அல்ல என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

பொன்.சிவகுமாரன் இன்றைய மாணவர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டி. ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகவும், துரோகிகளுக்கு எதிராகவும் உறுதியோடு நின்று போராடி வீரச்சாவடைந்த ஒரு போராளி.

அந்தவகையில் தமிழர் பிரதேசமெங்கும் மாணவர் எழுச்சிதினம் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

ஸ்ரீலங்கா அரசியல் வாதிகள் ஒவ்வொருவரும் முரண்பட்ட வகையிலேயே தொடர்ந்து கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். எனவே, இவர்கள் தமிழ் மக்களது அபிலாசைகளை எவ்வாறு தீர்த்து வைக்கப் போகின்றார்கள்? ஆனால், நாம் ஏமாற்றப்படுவோமாக இருந்தால் எத்தகைய விளைவை படைத்தரப்பு சந்திக்க நேரிடும் என்பதை ஸ்ரீலங்கா அரசு உணர்ந்துகொள்ள வேண்டும் - என்றார்.

தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.இராதாகிருஷ்ணன் உரையாற்றுகையில்:-

தமிழர்கள் தொடர்ந்து சுதந்திரமாக வாழ்வார்கள் என்ற எதிர்பார்ப்பிலேயே தான் முன்னைய ஸ்ரீலங்கா தலைவர்களுடன் இணைந்து ஆங்கிலேயருக்கு எதிராகத் தமிழர்கள் போராடினார்கள்.

அவ்வாறு சுதந்திரம் பெற்றதும் தமிழ்மக்களுடைய அபிலாஷைகளைப் புறக்கணிக்கத் தொடங்கினார்கள். அரசியல் ரீதியாக மட்டுமன்றி கல்வியிலும் தரப்படுத்தலைக் கொண்டு வந்தார்கள்.

இதன் விளைவாகவே பொன். சிவகுமாரன் போன்ற போராளிகள் தோன்றக் காரணமாகியது - என்றார்.

பாடசாலை மாணவன் லிங்கேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புங்குடுதீவு, நயினாதீவு, வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பல நூற்றுக் கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டனர். (எ-16)

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடமாடும் வைத்திய சேவை

## வலிமேற்கு பகுதியில் நடைபெறும்

சண்டிலிப்பாய்,ஜூன்8

வலிகாமம் மேற்கு பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சபையின் சுழிபுரம், வட்டுக்கோட்டை, சங்கானை, அராலி ஆகிய உப அலுவலக பிரிவுகள் தோறும் நடமாடும் இலவச ஆயுர்வேத வைத்திய சேவையை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சுழிபுரம் உப அலுவலகப் பிரிவிலுள்ள சுழிபுரம் பல்லசுட்டி காந்திஜி சனசமூக நிலையத்திலும்

12ஆம் திகதி மூளாய் இந்து இளைஞர் மன்ற கட்டடத்திலும் இலவச நடமாடும் வைத்திய சேவை நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை உப அலுவலகப் பிரிவில் எதிர்வரும் 17ஆம் திகதி வட்டுக்கோட்டை முதலி கோவிலடி அம்பாள் சனசமூக நிலையத்திலும் -

19ஆம் திகதி வட்டுக்கோட்டை துணைவி கலைவாணி சனசமூக நிலையத்திலும்,

24ஆம் திகதி வட்டுக்கோட்டை செம்பாட்டான் தோட்டம் அம்பாள் சனசமூக நிலையத்திலும், 26ஆம் திகதி வட்டுக்கோட்டை மேற்கு காந்திஜி சனசமூக நிலையத்திலும்

அடுத்த மாதம் முதலாம் திகதி வட்டுக்கோட்டை கிழக்கு ஜனசக்தி சனசமூக நிலையத்திலும் இலவச நடமாடும் ஆயுர்வேத வைத்திய சேவை நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து சங்கானை, அராலி ஆகிய உப அலுவலகப் பிரிவுகளில் ஜூலைமாத்தில இச்சேவை மேற்கொள்ளப்படவுள்ளது.


இந்த இலவச நடமாடும் ஆயுர்வேத வைத்திய சேவையை அவ்வப் பகுதி மக்கள் பயன்படுத்தி பயன் பெற வேண்டுமென வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் செயலாளர் திருமதி காந்திதேவி சிவானந்தராசா வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ-135)



சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் 10 லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடத்துக்கான அடிக்கல்லை யாழ்.சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி தா.சத்தியமூர்த்தி நட்டு வைப்பதைப் படத்தில் காணலாம். (எ-31)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1929 - 12 - 27



மறைவு
2000 - 06 - 10

### அமரர் சின்னத்தம்பி மகேஸ்வரா

ஆண்டு மூன்றுமாயிற்றோ அந்தோ நீர் எமைப் பிரிந்து
ஈண்டு உமது நினைவால் நாம் நிதமும் துடிக்கின்றோம்
அன்பு முகம் எப்போதும் கண் முன்னால் தெரிகின்றதே
இன்று ஆத்ம சாந்திக்காய் இதயத்தால் வணங்குகின்றோம்.

*'அன்னவில்லா',*
*உரும்பிராய்*
*வடக்கு,*
*உரும்பிராய்.* (18893)

உமது பிரிவால் வாடும்:
மனைவி

## அறநெறிப்பரீட்சையில் 10 மாணவர் சித்தி

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட 2002 ஆம் ஆண்டுக்கான இந்து அறநெறிப்பாடசாலைகளுக்கு இடையிலான பரீட்சையில் ஊரெழு, சக்திபுரம் சிவபூரணி முத்தமிழ் அறநெறிப் பாடசாலையைச சேர்ந்த 10 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்த 10 மாணவர்களின பெயர் விவரங்கள் அவர்கள் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் வருமாறு:

இரத்தினசபாபதி றேகா(4டி), சிவாணந்தராஜா ஜசித்திரா(4டி), சிவகரன் ஜனனி(4டி),சபாரத்தினம் நித்தியா (3டி,சி), நடேசபிள்ளை குகதாசன் (3டி,சி), சோதிலிங்கம் கோகுலன்(3டி,சி).

பூபாலசிங்கம் சயந்தா(2டி,சி.எஸ்), தர்மலிங்கம் ஜெயக்குமார்(2டி,சி, எஸ்), வைத்தியநாதன் குபிலினி(டி,3சி), சோதிலிங்கம் கஜனி (3சி,எஸ்).

## காணி அன்பளிப்பு

கொடிகாமம் வலய சமுர்த்தி வங்கிக்கு கட்டடம் அமைப்பதற்கென இரண்டு பரப்புக் காணி நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.இக்காணியினை கொடிகாமம் மத்தியைச் சேர்ந்த சமுர்த்திப் பயனாளியான சி.மணிவண்ணன் என்பவர் வழங்கியுள்ளார்.

இக்காணியின் தற்போதைய மதிப்பிடப்பட்ட பெறுமதி பரப்பு ஒரு லட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை உபஅதிபர்
**திருமதி மகாராணி கணேசன்**
அவர்களின் அன்புத் தந்தையார்
**சண்முகம் தம்பிப்பிள்ளை**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்,
யா/புங்குடுதீவு கமலாம்பிகை
வித்தியாலயம்.
(18894)

## ஒன்பதாவது ஆண்டு நினைவுப் பிரார்த்தனை

குப்பிளான் கற்கரை விநாயகர் துணை

தவப்பேறு
11 - 01 - 1960



சிவப்பேறு
03 - 06 - 1994

### திருமதி ஞானலஷ்சுமி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி

(B.A. HONS.Eng. Trd.)

*(ஆசிரியர் - நல்லூர் இந்து பெண்கள் பாடசாலை)*

**"இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்கா அன்பே!"**

*28,கைலாசபிள்ளையார்*
*கோயில் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (18896)

ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (கணவர்),
தாய், சகோதரி, மைத்துனர்,
மாமா, மாமி, பெறாமக்கள்,
மருமக்கள், உறவினர்,

## ஆறுமுகம் ஆசிரியர் நினைவுப் பிரார்த்தனை

### கோப்பாய் - இனுவில் கந்தையா ஆறுமுகம்(ஆசிரியர்)



சிவப்பேறு 21.12.1918 தவப்பேறு 08.05.2003


எந்தையே எம் தெய்வமே இனி
எங்கே காண்போம்?



திருமண வாழ்வில்
50 ஆண்டுகள் நிறைவு விழாவில்
அன்னையும் பிதாவும்
25.05.2002



திருமுறை பாடித்
தினமும் வலம்வந்த எந்தை



எங்கள் தந்தை இறுதியாகக்
கலந்துகொண்ட பொது வைபவம்
தான் கல்வி கற்ற கோப்பாய் நாவலர்
பாடசாலை விழா - 2003

*28, கைலாசபிள்ளையார் கோயில் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

இன்று முற்பகல் 11மணி, நல்லூர் ஸ்ரீதுர்க்கா மணி மண்டபத்தில்
பிரார்த்தனையும் மதியபோசனமும் இடம்பெறும். (சி-28325) **ஆறுமுகம் ஆசிரியர் குடும்பம்.**


## அதிபோஷாக்கு மிக்க உன்னத பானம்

புரோவினெக்ஸ் இல் 16 வகையான
விற்றமின்களும் மேலதிக
கனியுப்புக்களும் அடங்கியது.

**PROVIN-X**

- இழந்த சக்தியை விரைவாக மீட்டெடுத்தல்
- நோய்வாய்ப்பட்டோர் உடன் புத்துணர்வு பெற
- கண்பார்வை சக்தியை அதிகரித்தல்

மேலும் விளையாட்டு வீரர்,
கர்ப்பிணித்தாய்மார், வளரும் பிள்ளைகள்,
வயோதிபர் உட்பட முழுக்குடும்பத்துக்கும்
ஏற்ற சிறந்த பானம்



*யாழ். முகவர்:*
**ஜெகன் பார்மசி,**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 3191

*வன்னி முகவர்:*
**அகிலன்ஸ் பார்மஸி**
(பிள்ளையார் மருந்தகம்)
கிளிநொச்சி.



*இலங்கையில் சந்தைப்படுத்துவோர்:*
**ARKEM COLOMBO**
T.P.: 470290, 075 344436
E-mail: arkem@sltnet.lk
(சி27733)

**PROVIN - X** தற்போது அனைத்து முன்னணி பார்மஸிகளிலும் பிரதான கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இலங்கை
**கலைப்பீட மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழக மீள்பரீட்சைகள்**
*(பழைய பாடத்திட்டம்)* - 2002

முதற்கலைத் தேர்வு, பொதுக்கலை/சிறப்புக்கலைப் பகுதி I, பொதுக்கலை/சிறப்புக்கலை பகுதி II, சிறப்புக்கலைப் பகுதி III ஆகிய கலைப்பீட மாணவர்களுக்கான மீள பரீட்சைகளும், முதலாம், இரண்டாம், மூன்றாம் வருட நுண்கலைமாணி/நுண்கலைமணி ஆகிய இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களுக்கான மீள் பரீட்சைகளும் 09.06.2003ஆம் திகதிமுதல் நடைபெறும். பரீட்சை நேர அட்டவணை கலைப்பீடத்தின் அனைத்து விளம்பரப் பலகைகளிலும் இடம்பெற்றுள்ளன.

கலைப்பீடம் மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களுக்கான இரண்டாம் மொழி ஆங்கில மீள் பரீட்சைகள் (ESL Level I, II& III) முறையே 10.06.2003, 11.06.2003, 12.06.2003 ஆகிய திகதிகளில் பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

மீள் பரீட்சார்த்திகள் இந்த அறிவித்தல்களைக் கவனத்திற்கொள்ளவும்.

பதிவாளர்.
05.06.2003. (C - 28307)

# முதியோர் இல்லத்தில் நூலகக் கட்டடம்

வடமராட்சி,ஜூன்8

வதிரியிலுள்ள வட இலங்கை ஸ்ரீ பரமானந்தா சிறுவர், முதியோர் இல்லத்தில் சமூக சேவைகள் அமைச்சினால் எட்டு லட்சம் ரூபா செலவில் புதிய நூலகம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

அத்துடன், இதே அமைச்சினால் ஆச்சிரமத்தில் உள்ள முதியோர் இல்லமும் 30 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

(எ-173-36)


## பதவி வெற்றிடம்

ஏ-9 பாதை புனரமைப்புச் செய்யும் ஸ்தாபனத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன. தகைமையுடையோர் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

1) Quantity Surveyor
2) Project Accountant (திட்டக் கணக்காளர்)
3) Data Entry Operator
4) Office Assistant (காரியாலய உதவியாளர்)
5) Heavy Vehicle Drivers (பாரஊர்தி ஓட்டுநர்)
6) Mechanics (Diesel & Hydraulic)
7) Road work Supervisors
8) Trainee Supervisor
9) சமையலாளர்

**Project Manager,**
A-9 Project site office,
Shakkane Engineering (Pvt.) Ltd.,
Kandy Road, Usan Junction,
Mirusuvil.

(18790)

## வேலை ஆள்கள் தேவை

1. உணவு பரிமாறுவோர் (சப்ளையர்ஸ்)
2. ரீ மேக்கர்
3. சமையலாளர்கள்

விரும்புவோர் கீழ்க் குறிப்பிட்ட விலாசத்துக்கு நேரில் சமுகம் தரவும். சம்பளம் நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளப்படும்.

**மலாயன் கபே**
36, 38, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(18860)

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையிலும், சுன்னாகம் கிளையிலும் 31.12.1984 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில்

**பகிரங்க ஏல விற்பனை**


செய்யப்படும்.

| கிளைகளின் விவரம் | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் செய்யப்படும் இடம் |
|---|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை | 19.07.2003 இருந்து →22.07.2003 வரை | யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை |
| சுன்னாகம் கிளை | 26.07.2003 இருந்து →29.07.2003 வரை | யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை |

யாழ்.பிரதேச முகாமையாளர்,
மக்கள் வங்கி.

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

(சி-28303)








## யாழ்ப்பாணம்
### இருளிலிருந்து ஒளியை நோக்கி

தேசத்தை மீண்டும் கட்டி எழுப்புவதை நோக்கமாகக் கொண்டு, பிரதமர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள பாரிய அபிவிருத்திச் செயற்பாடுகளின் கீழ் மின்வலு, மின்சக்தி அமைச்சர், கௌரவ கரு ஜயசூரிய அவர்களின் வழிகாட்டலின் பேரில் யாழ் குடாநாட்டில் செயற்படுத்தப்பட்ட மின்சார புனரமைப்பு செயற்பாட்டின் மூலம், கடந்த பதினெட்டு மாத காலத்திற்குள் மின்சாரத்தைப் பெற்ற வீடுகளின் தொகையை 65,000 ஆக ஆக்கியதோடு மேலும் 3200 வீடுகளுக்கு மின்சாரத்தை வழங்கும் செயற்திட்டம் கீழ்வரும் பிரதேசங்களில்

| | செலவு |
|---|---|
| இடும்பன் | ரூ. 5,034,000 |
| பன்னாலை | ரூ. 8,159,000 |
| தொட்டிலடி | ரூ. 6,768,000 |
| சில்லாலை | ரூ. 3,879,775 |
| மண்டான் | ரூ. 5,373,920 |
| ஏழாலை வடக்கு | ரூ. 4,013.000 |
| காரைநகர் கிழக்கு | ரூ. 4,771,000 |
| இடைக்காடு | ரூ. 6,095,000 |
| அச்சுவேலி (கதிரிப்பாய்) | ரூ. 5,500,000 |
| துர்க்காபுரம் | ரூ. 8,643,000 |





இன்று இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் கௌரவ தியாகராஜா மகேஸ்வரன் அவர்களால் யாழ்ப்பாண மாவட்ட ஏனைய அனைத்து மக்கள் பிரதிநிதிகளின் வாழ்த்துக்களோடு பொது மக்களுக்காக அர்ப்பணிக்கப்படும். யாழ் குடாநாட்டில் உள்ள எல்லா வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கும் செயற்பாட்டின் கீழ் எதிர்வரும் ஆறு மாத காலத்திற்குள் மேலும், 10,000 வீடுகளுக்கு மின்சாரம் வழங்கி மக்கள் வாழ்வில் ஒளியேற்றும் செயற்திட்டத்தை இலங்கை மின்சார சபை முன்னெடுத்துள்ளது.

விபரங்களுக்கு
பிரதேச மின் பொறியியலாளர் (யாழ்ப்பாணம்)
**இலங்கை மின்சார சபை**
சுன்னாகம்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வண்டில் சவாரிக்கு தகுதியுள்ள நல லின காளை மாடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: இல.20, கொழும்புத் துறை வீதி, சுண்டுக்குளி. (18862)

**Sony Handycam Video Hi8** பாவித்த நல்ல நிலையிலுள்ள வீடியோ கமரா விற்பனைக்குண்டு. **Model No.: CCD-TR820E** தொடர்புகளுக்கு: 208, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். **T.P. 222 3170** (18856)

கொங்கிறீற் கற்கள் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இ. சேகர், 162,அரசடிவீதி, நல்லூர் (டயானா தொலைத் தொடர்பு நிலையத்துக்கு முன்பாக) **T.P No.3146.** (18855)

51...தொடரிலக்கமுடைய நிசான் வனட் 120 வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: **K.**அழகரட்ணம், நீர்வேலி தெற்கு, 222 - 5871. (18848)

கோழி வளர்ப்பிற்குரிய பாவித்த நல்ல நிலையில் உள்ள நீர்க்கான், உணவுத்தட்டு, பாவித்த நெற் என்பன மிகக்குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: 166, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (18861)

1½ மாதம் நிரம்பிய தூய இன டோமன் பிஞ்சர் அல்சேஷன் குறோஸ நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: **No.6,** நந்தாவில் ஒழுங்கை (இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை பின் ஒழுங்கை), கொக்குவில் கிழக்கு. நேரம்: நண்பகல் 11.00-12.00, பிற்பகல் 5.00-6.00. (18885)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் 1kg 160/-. கல்பேட் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம்செய்தல் இலவசம். தொடர்பு: 1. மான்ஸ் பாடசாலை வீதி, டச் றோட், உடுவில். 2. மீன் சந்தை முன்பாக, சுன்னாகம். (18725)

நிறைகூடிய புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. விலை 1Kg 20 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. தினமும் சுத்தம்செய்து வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு.(18817)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 1kg;160/-. சுத்தம் செய்யப்பட்டது 1kg240/-. மொத்தமாகக் கொள்வனவு செய்வோருக்கு கழிவு வழங்கப்படும். தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, **T.P.No.: 3529, 2867.** (18822)

**Prima, Broiler** மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக் கொள்ளலாம்(**Electronic** நிறுவை). தொடர்பு (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(18718)

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. விலை 160/-. சுத்தம்செய்தல் இலவசம். தொடர்பு: P.ரவி, தபாற் கந்தோர் அருகில், சாவகச்சேரி.(18845)

## தவறிவிட்டது

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த கு.ஜெகதீஸ்வரக்குருக்களின் தேசிய அடையாள அட்டை (இல.53334356.V), விசேட அடையாள அட்டை (இல.[illegible]477), என்பன, மாதகலுக்கும் வட்டுக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (18877)

இடைக்குறிச்சி, மேற்கு வரணியைச் சேர்ந்த கந்தசாமி தேவமனோ என்பவருடைய தேசிய அடையாள அட்டை (52[illegible]52301V), விசேட அடையாள அட்டை என்பன சாவகச்சேரிக்கும் வரணிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும்.(18888)

## சனிமாற்றம் எப்படி?

எங்கும் விற்பனையாகின்றது. யாழ் பல்நிலைய புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். சமூக, பொருளாதார இராணுவ அரசியல் மாற்றங்களை உண்டாக்கும். 15/- கணிப்பாசிரியர் **Prof.** சத்தியதாசன் (சத்யா), 3ஆம் மைல், ஆனைக்கோட்டை **T.P.** 021 - 222 2753. (18881)

## மணமகன் தேவை

யாழ்.கௌரவ குடும்பம், 33வயது, செவ்வாய்க் குற்றமற்ற, சுவாதி நட்சத்திர மணமகளுக்கு வெளிநாட்டில் தொழில் புரியும் மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 1918, மே/பா உதயன். (18802)

## மணமகள் தேவை

யாழ்.கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, யாழ்ப்பாணத்தில் சொந்தக் கடை வைத்திருக்கும் மணமகனுக்கு செவ்வாய்க் குற்றமற்ற, 35 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. சைவ போசனம் விரும்பத்தக்கது. விளம்பர இல. 1919, மே/பா உதயன். (18801)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தினர் தமது 29 வயது, உத்தரட்டாதி நட்சத்திரம் 4ஆம் பாதம் - உயரம் 5'7" வியாபார நிர்வாக முதுமாணி படித்த அரச நிறுவனத்தில் உத்தியோகத்தராகப் பணியாற்றும் மணமகனுக்கு பொருத்தமான பட்டதாரி மணமகளை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: திரு.வி.யோகராஜா, பழைய தபாற் கந்தோர் ஒழுங்கை, கொக்குவில். (18883)

## தேவை

வீடு வாடகைக்குத் தேவை. நல்லூர், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்குள் விரும்பத்தக்கது. தொடர்பு: 0777-722215. (18831)

## ஆங்கில வகுப்பு

ஆங்கில (சா/த) டிசெம்பர் 2003 மீட்டல் வகுப்புகள் ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியரினால் ஆரம்பிக்கப்படவுள்ளன. **Visiting Possible** புதிய இலக்கம் 33, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி (தெற்கு), யாழ்ப்பாணம். (18879)

## வகுப்புகள்

**English, Maths O/L** பரீட்சையில **A,B,C** பெறுபேறடையவும் தரம்6-10 வரை உட்பட ஆங்கிலம் **A/L G.A.Q.** பல்கலைக்கழக மாணவர்களுக்கும் கற்பிக்கப்படும் தொடர்பு: 85, சிவன்கோயிலடி, சிவன்கோயில் பின்புறம், திருநெல்வேலி. (18867)

# விஞ்ஞான பிரிவு ஆரம்பிக்க அனுமதி

சண்டிலிப்பாய்,ஜூன்8

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவிகளின் நலன்கருதி விஞ்ஞான பிரிவு வகுப்பு இம்மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

விஞ்ஞான பிரிவு வகுப்பை ஆரம்பிப்பதற்கான அனுமதியை வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் வழங்கியுள்ளதாக கல்லூரி அதிபர் செல்வி பெ. கந்தசாமி தெரிவித்தார். (எ-135)

# மாணவர் எழுச்சிநாள் போட்டி முடிவுகள்

சாவகச்சேரி,ஜூன்8

தமிழ் மாணவர்கள் எழுச்சி நிகழ்வுகளை முன்னிட்டு தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட கட்டுரை, ஓவியப் போட்டிகளில் பங்குபற்றி முதலாவது இடத்தைப்பெற்ற மாணவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

### கட்டுரைப் போட்டி

*கீழ்ப்பிரிவு:-* ப. சுஜீதா (மந்துவில் பாரதி வித்தியாலயம்)

*மத்தியபிரிவு:-* ந.சுதாஜினி (விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்)

*மேற்பிரிவு:-* க.கஜானி (உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்).

### ஓவியப்போட்டி

*கீழ்ப்பிரிவு:-* நா.ஆஷாயினி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

*மத்தியபிரிவு:-* இ.சுரேஸ் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

*மேற்பிரிவு:-* க.தனஞ்சயன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி). (எ-31)

# இணையம் நாளை முதல் இடம்மாறும்

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் நாளை திங்கட்கிழமை தொடக்கம் இல. 40, யாழ்.கோயில் வீதி எனும் முகவரியில் இயங்கவுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக இல.28, கோயில் வீதி என்னும் முகவரியில் இந்த அலுவலகம் இயங்கிவந்தமை தெரிந்ததே. (எ-10)


# மக்களுக்காக...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

எம் தேசத்தினதும் எம் இனத்தினதும் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளவே எத்தனையோ மாணவர்கள் போராளிகளாக மாறினார்கள்; இப்பொழுதும் மாறுகிறார்கள். இதன் மூலம் பலம்பெற்ற ஓர் இயக்கமாக நாம் திகழ்கிறோம்.

டோக்கியோவில் நடைபெறவுள்ள நிதிவழங்கும் மாநாட்டை நாம் ஏன் புறக்கணித்தோம்? இதற்குப் பல காரணங்களைக் கூறமுடியும் இலங்கை அரசானது எம்மைப் பகடைக்காயாக்கிப் பணம்பெற நினைக்கிறது. அப்பணத்தினைக் கொண்டு தென்னிலங்கையை வளம்படுத்த எண்ணுகிறது. இதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். இதனை உலக நாடுகளும் அறிந்துகொள்ள வேண்டும்.

நாம் ஓர் இலக்கு நோக்கி எமது பயணத்தைத் தொடர்கின்றபோது பெரும் எதிர்ப்புக்களையோ, ஏமாற்றங் களையோ, தோல்விகளையோ சந்தித்தாலும் துவண்டு போவதில்லை. அந்தப் பயணத்தை அடைந்தே தீருவோம் அதேபோன்று மாணவர்களாகிய நீங்களும் எமது தலைவனின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும். அதன் மூலம் இழந்த எம் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளலாம். இந்த நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதில் நாமும் முழுமனதுடன் செயலாற்றி வருகிறோம் - என்றார். (எ-10-ரி-6)


Finished your *A'levels?* Looking for that *Internationally Recognised Degree?* We know the story: Costly fees, studying miles away from home; prospects appearing to be limited...*NOT ANY MORE!*

## WELCOME TO ANC!

**What makes us unique?**

We provide *Quick and Easy Access* to the finest American Universities even *Whilst Your A'level Results Are Pending!*

**Can You Transfer? YES!**

Accredited American Transcripts are offered to *ANC* students by Patten University, California. Patten University is accredited by *WASC (Western Association of Schools and Colleges)* which accredits prestigious Universities like *Stanford, Berkley & UCLA.*

**ANC's Member Universities.**

The Rochester Institute of Technology (RIT), Pepperdine University, The University of Wisconsin And Many More...

**MAJOR or DOUBLE IT!**

Read a degree in *Engineering, Business, IT or Health Science* along with the option of specializing in fields such as *Robotics & Aeronautics.* You may even opt for a combination of the above and receive a *Double Degree!*

**SAT & TOEFL - Can I Prep at ANC? YES!**

Our SAT and TOEFL programmes have been developed using the most up-to-date curriculum and teaching methods and is supervised by the American Faculty to offer the highest quality program.

**SAVE upto 45, 65% & 80% on career pathways.** Enjoy the benefits of *Financial Aid Both Locally And Internationally.*
"2+2 pathway" : 2 years in Sri Lanka and 2 years in the US. "3+1 pathway" : 3 years in Sri Lanka and 1 year in the US.
"4+0 pathway" : Primary degree in Sri Lanka and a Masters in the US.

## ANC Seminar in Jaffna

Venue: Pillaiyar Inn (31, Manipay Road, Jaffna.)
Date: 14th June 2003 (Saturday)
Time: 10:30 am

For further details and to reserve a seat;
Please Contact: Mr. Ifthikar Marikar
The Finance Co. Ltd.
No: 173, Stanley Road, Jaffna.
Telephone No: 021-2222310

AMERICAN NATIONAL COLLEGE
A Member of Ceylinco Consolidated

## யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் - வ.து

### நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள், வில் தராசுகள் ஏல விற்பனை

இச்சமாசத்தில் இருக்கும் றொபின், என்பீல்ட் ரக நீர் இறைக்கும் இயந்திரங்களுக்கான பல்வேறு உதிரிப்பாகங்கள் மற்றும் வில் தராசுகள் ஆகியவை நல்லநிலையில் உள்ளன. இவை எதிர்வரும் 18-06-2003 புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சமாசப் பணிமனையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இவற்றைச் சமாச பணிமனை வேலை நாள்களில் பார்வையிடலாம் என்பதுடன், இது தொடர்பான மேலதிக விவரங்களையும் அறிந்துகொள்ளலாம் என்பதனை அன்புடன் தெரியப்படுத்துகின்றோம்.

*111, பிராதன வீதி,*
*யாழ்ப்பாணம்.* (சி-28311)

தலைவர்,
யாழ்.மா.வி.நு.கூ.ச.சமாசம்.


## மூளாயில் நாளை வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

சண்டிலிப்பாய்,ஜுன்8

சுழிபுரம் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவைச் சேர்ந்த மூளாய், பொன்னாலை ஆகிய பகுதிகளில் நாளை திங்கட்கிழமை வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்ற[illegible]வுள்ளது.

அன்று காலை 9 மணிமுதல் 11 மணிவரை பொன்னாலை சனசமூக நிலையத்திலும் - முற்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை மூளாய் இந்து இளைஞர் மன்றத்திலும் -

பிற்பகல் 2 மணிமுதல் 4 மணிவரை தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்திலும் தடுப்பு ஊசிமருந்து ஏற்றப்படும் என சுழிபுரம் பொது சுகாதாரப் பரிசோதகர் எஸ். ரதிஷன் அறிவித்துள்ளார். (எ-135)

# கசூரினா கடற்கரைக்கு பஸ் சேவை அதிகரிப்பு

காரைநகர்,ஜுன்8

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்துக்கு தினசரி மூன்று தடவைகள் யாழ்.மத்திய பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து நேரடி பஸ்சேவை நடத்தப்படுகிறது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலை இதனை நடத்தி வருகின்றது.

ஈழத்துச் சிதம்பரம் மற்றும் கசூரினா பீச் ஆகியவற்றுக்கு தினமும் பெருமளவு மக்கள் ([illegible])று வருகின்றனர். அவர்கள் போக்கு[illegible]த்து வசதியின்றி நீண்டதூரம் நடந்து செல்லவேண்டி இருந்தது.

இதனைக் கருத்தில் கொண்டே இந்த பஸ்சேவை ஆரம்பிக்கப்[illegible]ள்ளது - என்று காரைநகர் [illegible] டாரங்கள் தெரிவித்தன[illegible]

தினமும் காலை 8.15, பகல் 11.45 பிற்பகல் 3.30 ஆகிய நேரங்களில் யாழ்நகரில் இருந்து காரைநகர் நோக்கிப் புறப்படும் பஸ்கள் ஈழத்துச் சிதம்பரத்துக்குச் சென்று வருகின்றன என்றும் - கூறப்பட்டது. (எ-73)

## மணல்மேடுகளை அகற்றும் பணி ஆரம்பம்

அரியாலை,ஜுன்8

யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கை புனரமைக்கும் முகமாக விளையாட்டு அரங்கின் கோட்டைப் பக்கமாகவுள்ள மணல்மேடுகளை புல்டோசர் மூலம் சீர்செய்யும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன் விளையாட்டு மைதானத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட சீமெந்திலான தூண்களும் தற்போது அகற்றப்பட்டு வருகின்றன. (எ-17)

## போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பம்

தொழிற்பயிற்சி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்டப் பயிற்சி நிலையத்துக்குப் போதனாசிரியர்களை நியமிப்பதற்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதியானவர்கள் எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரி.இராஜநாயகம் அறிவித்துள்ளார். (எ-10)


# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சர்வ மங்கள்கரமான சுபானு வருஷம் வைகாசி மாதம் 28ஆம் நாள் (11.06.2003) புதன்கிழமை பகல் 01 மணி 59 நிமிஷம்முதல் 02மணி 47 நிமிஷம் வரையுள்ள கன்னிலக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்



எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**சுகுமாரன்**
அவர்களுக்கும்




எமது புத்திரி
திருநிறை செல்வி
**கஸ்தூரி**
அவர்களுக்கும்



முருகன் திருவருள் துணையுடன் கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் திருமணம் செய்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து ஆசீர்வதித்துத் தொடர்ந்து இடம்பெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி ந.கந்தசாமி,
தெணி, வல்வெட்டித்துறை.
(18202)

*(இரு வீட்டார் அழைப்பு)*

திரு.திருமதி ச.இரகுநாதன் *(கட்டி)*
காட்டுப்புலம், தொண்டமானாறு.
த.மு.: இல.954, திருநகர்,
கிளிநொச்சி.



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# திருமண அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் சுப மங்களகரமான சுபானு வருடம் வைகாசி மாதம் 26ஆம் நாள் (09.06.2003) திங்கட்கிழமை பகல் 12.40 முதல் 1.30 மணிவரையுள்ள கன்னி லக்கின சுப முகூர்த்தம் கூடிய வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
திருவளர் செல்வன்
**சந்திரகுமார்**
(குமார் நகைத் தொழிலகம்)
அவர்களுக்கும்



எமது சிரேஷ்ட புத்திரி
திருவளர் செல்வி
**கலைவாணி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, யாழ்ப்பாணம், வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய மண்டபத்தில் (நாச்சிமார் கோயிலில்) நடைபெறும் திருமண வைபவத்திற்கு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*வரவேற்புபசாரம்:* **மணமகன் இல்லத்தில் 10.06.2003 செவ்வாய்க்கிழமை பி.ப. 4.00 மணிக்கு நடைபெறும்.**

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி சி.சுப்பிரமணியம் குடும்பம்,
திரு.திருமதி கி.பாலகிருஷ்ணன் குடும்பம்,
பிளாக் வீதி, சங்கானை.

(18865)

திருமதி நா.மகேஸ்வரி குடும்பம்,
521/2, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.



# MEDECINS SANS FRONTIERES
## (FRANCE)
## மெடிசின்ஸ் சான்ஸ் (F)புரன்றியஸ் (பிரான்ஸ்)
## அழைப்பு

அன்புடையீர்!

எமது நிறுவனத்தின் பிரியாவிடை விழா எதிர்வரும் (29.06.2003) ஞாயிறு காலை 10.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடைபெறவுள்ளது. தெமட்டக்கொட, பேஸ்லைன் வீதி, மவுட்மேரி வரவேற்பு மண்டபத்தில் (ரயில்வே விளையாட்டு மைதானத்துக்கு முன்னால்) நடைபெறவுள்ள இந்த விழாவுக்கு எம்.எஸ்.எவ். (பிரான்ஸ்) இலங்கை நிறுவனத்தில் சேவையாற்றிய அனைத்து ஊழியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

☞ விழாவில் கலந்துகொள்வோர் எதிர்வரும் ஜுன் 15ஆம் திகதிக்கு முன் கொழும்பு தலைமைக் காரியாலயத்துடன் தொலைபேசியூடாகத் தொடர்புகொள்ளவும்.

**T.P.** இல.: 01 691052, 01 693350, 01 679769.

✪ அன்றைய தினம் ஊழியர்களுக்கு சேவைச் சான்றிதழ் வழங்கப்படும்.

**7, KYNSEY TERRACE,**
**COLOMBO - 08.**

(சி-28297)

- நிறுவனத்தினர்.
**M.S.F.**



## மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான பாடசாலை

மேற்படி பாடசாலை **10.06.2003** திங்கட்கிழமை பின்வரும் விலாசத்தில் ஆரம்பமாகும் என்பதை அறியத்தருகின்றோம்.

Lions Club,
Inner Colombo. (C/28319)

இல.33, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.



## விற்பனைப் பிரதிநிதி தேவை

Clenol Soap & Detergent விற்பனைசெய்ய யாழ்ப்பாணத்துக்கு விற்பனைப் பிரதிநிதி தேவை.

வயது 20- 35 இற்கும் இடையில் உள்ளவர்கள். கவர்ச்சியான சம்பளமும் தரகுப் பணமும் (கொமிசன்) வழங்கப்படும்.

கீழ் உள்ள முகவரிக்கு உடன் விண்ணப்பிக்கவும்.

The D.G.M.
Tradex
NO.69 ,Kandy Road, Mallawa pitiyh,
Kurunegala.
(C/28313)



## முகவர் தேவை

பிளாஸ்ரிக் பொருள்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்திவரும் கொழும்பிலுள்ள முன்னணி நிறுவனத்திற்கு தமது உற்பத்திப் பொருள்களை யாழ்ப்பாணத்தில் விநியோகிப்பதற்கு முகவர் தேவை.

முகவருக்கு அவசியமானவை.

★ வங்கி உத்தரவாதம்

(தனிப்பட்ட பார ஊர்தி எதிர்பார்க்கப்படுகிறது)

சிறந்த நிதி வசதி, விநியோக முன்னனுபவம், ஏனைய வசதிகள் உடையவர்கள் தமது சுயவிவரம் அடங்கிய விண்ணப்பப் படிவத்தினை 10 நாள்களுக்குள் அனுப்பிவைக்கவும்.

**The Business Development Manager,**
K.G. Plastics Ltd.
545, Sri Sangaraja Mawatha, Colombo - 10.
Fax: 448211 Tel.: 075 371719
E-mail: kggroup @ lanka .ccom .lk
(18881)



## முதலாம் வருட நினைவஞ்சலி

தோற்றம்
25 - 05 - 1923



மறைவு
21 - 05 - 2002

### திருமதி இராசையா பத்மாசனி

திதி: 08.06.2003

*பொங்கிவரும் பெரு நிலவாய் புன்னகையின் இருப்பிடமாய்*
*மங்காத மணிவிளக்காய், எங்கும் பிரகாசித்த அன்னையே!*
*இங்கு ஓராண்டு கடந்தும் உன் நினைவு மறக்கமுடியவில்லையே!*
*எங்கு பார்த்தாலும் உன் திருமுகமே தெரியுதம்மா!*

*59, ஆனந்தன் வடலி றோட்,*
*அரியாலை.*

(18886)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# பரிசுத்த ஆவியின் அடியொற்றி ஆண்டவருக்கு சாட்சியாவோம்!

## ஞாயிறு நற்பிரசாதம்

இயேசு உயிர்த்தெழுந்து விண்ணகம் சென்றதும் இயேசுவைக் கொன்ற யூதர்களால் தங்களுக்கு என்ன ஆபத்து நேருமோ என்று அச்சமடைந்த சீடர்கள் எவர் கண்ணிலும் தென்படாது பூட்டிய அறைக்குள் இருந்தனர். பெந்தக்கோஸ்தே விழாவன்று திடீரென பெருங்காற்று வீசுவது போன்று இரைசல் வானத்தில் உண்டாகி அவர்கள இருந்த வீடு முழுவதும் ஒலித்தது.

நெருப்பு போன்ற நாவுகள் அவர்களுக்கு தோன்றி பிளவுண்டு ஒவ்வொருவர் மேலும் வந்து இறங்கியது. எல்லோரும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு திடம்பெற்று பல மொழிகளிலும் போதிக்கத் தொடங்கினர்.

அதே புனித ஆவி திருமுழுக்கு வழியாக எம்மீது பொழியப்படுகிறது. தூய ஆவியானவரே பல்வேறு கொடைகளையும், வரங்களையும் எமக்கு அருளுகிறார். ஒருவருக்கு ஞானம் நிறைந்த பேச்சு அருளப்படுகிறது. மற்றொருவருக்கு விசுவாசமும் பிறிதொருவருக்கு குணமாக்கும் வரமும் அதே ஆவியால் கொடுக்கப்படுகிறது. ஒருவருக்கு புதுமை செய்யும் ஆற்றலும் இன்னொருவருக்கு இறைவாக்கு வரமும் வேறொருவருக்கு பலவகைப் பரவசப் பேச்சும் அடுத்தவருக்கு அதை விளக்கும் திறனும் கிடைக்கின்றன. இவை அனைத்தும் பொது நன்மைககாகவே அருளப்படுகிறது.

இவ்வாறு பெற்றுக்கொண்ட கொடைகளை நாம் எப்படி பயன்படுத்துகிறோம்? நமது பேச்சு வன்மையால் அடுத்தவரை மட்டம்தட்டி தமது சுய தேவைகளை பூர்த்தி செய்வோர் இல்லையா? ஆற்றல்கள், திறமைகளைப் பயன்படுத்தி பிறருக்கு கெடு விளைவிப்போர் எத்தனை பேர்?

இறைவனை அறியாதவரை வாழ்வின் பாதையில் பரிதவிப் போரை துன்பத்தில், நோய்களில் துவண்டு வாடுவோரை தீய வழிகளில் சீரழிந்து செல்வோரை விடிவை வேண்டும் அடிமைகளை அரவணைத்து இறைவழியில் இட்டுச் செல்லவே இக்கொடைகள் எமக்கு பொழியப்பட்டுள்ளன. என்பதை உணர்ந்து செயலாற்றுவோம்.

**என்.ஜேசுதாசன்**

தேவ ஆவி விளைவிக்கும் பலன்களான அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, தன்னயம், விசுவாசம், சாந்தம், தன்னடக்கம் போன்ற பண்புகளை அடியொற்றி ஆவிக்குரிய வாழ்வால் இறைவனுக்கு சாட்சியம் பகர்வோம். ஆற்றல்கள், திறமைகள், அருட்பொழிவுகளைப் பகிர்ந்து வாழ்வோம்.

★

## யாழ்.ஆஸ்பத்திரி வளவில் அ.அட்டைகள் மீட்பு!

யாழ்.போதனா வைத்தியசாலை வளவினுள் பத்மநாதன் ஜகதாம்பிகை என்பவரது தேசிய அடையாள அட்டை (746331304 V) விசேட அடையாள அட்டை (0906009828) ஆகியன கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் -

உரியவர் நேரில் வந்து அவற்றை அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-10)

## திக்கரை முருகனுக்கு இராஜகோபுரம்

காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோவிலில் புதிதாக இராஜகோபுரம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் இந்த இராஜகோபுரத்திற்கான அடிக்கல்லை கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நட்டுவைத்தார். (எ-73)

## நூல் அறிமுக விழா

வளவை வளவன் எழுதிய 'தேசத்தின் பாடல்கள்' சிறுகதை நூல் அறிமுக விழா இன்று பிற்பகல் 3.30 மணிக்கு செம்பியன் செல்வன் தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக யாழ்மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி கலந்துகொள்வார். நூலின் அறிமுகவுரையை பொன். கணேசமூர்த்தி நிகழ்த்துவார்.(எ-10)

# மக்கள் முகம்



கடந்த மார்ச் மாதம் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தேசிய ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி தரம் 13 மாணவி முருகையா ராதிகா திறமைச் சித்தி பெற்றுள்ளார். (எ-180)

★ ★ ★



கரவெட்டி மத்தியைச் சேர்ந்த ஆழ்வார் கந்தசாமி அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் 37 வருடங்களுக்கு மேலாகக் களஞ்சியக் காப்பாளராகக் கடமையாற்றிவரும் இவர், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவரும் ஆவார். (எ)


★ ★ ★



யாழ்.கில்னர் கல்லூரி வீதி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட சண்முகராஜா ஜெகதீஸ்வரராஜா (ஜெகதீஸ்) கடந்த மாதம் யாழ்.மேலதிக நீதிவான் பா.சுப்பிரமணியம் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர், யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவனும், அக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க உபசெயலாளரும் ஆவார்.

★ ★ ★



நயினாதீவு அஞ்சலதிபர் நா.க.குமாரசூரியர் பதவி உயர்வுக்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று, அஞ்சலதிபர் UPS BIB தரத்திற்குப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற பதவி உயர்வுக் கடிதங்கள் வழங்கும் வைபவத்தில் மக்கள் தொடர்பாடல் அமைச்சரிடமிருந்து இவர் தமது பதவி உயர்வுக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார். (எ)

# சமுர்த்தி அலுவலருக்கு நிரந்தர நியமனம்

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் தரம்1,தரம்2 இல் மூன்று வருட காலம் பணியாற்றியவர்களை நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கைகளை சமுர்த்தி அதிகார சபை மேற்கொண்டுள்ளது.

இதற்கான சுற்றறிக்கைகள் சமுர்த்தி அதிகார சபையினால் பிரதேச செயலர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

முதல் நியமனம் செய்யப்பட்டது முதல் தொடர்ச்சியாக 3வருட கால திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்தவர்களும் -

விளைத் திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களும் நிரந்தர நியமனம் கோரி விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிரந்தர நியமனத்துக்கான விண்ணப்பபடிவங்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.


# சிறுவர் இம்சை ஒரு தொடர் கதை! (யா?)

**சிறுவர் இம்சை என்றால் என்ன?**

ஒரு பிள்ளைக்கு நேரடியாக வருத்தம் அல்லது தீங்கு ஏற்படுத்தும் செயல்கள், அவற்றின் விளைவாக அப்பிள்ளையின் ஆரோக்கியமும் மேம்பாடும் மோசமாக பாதிப்படைய ஏதுவான செயல்கள் என்பன பொதுவாக சிறுவர் இம்சை எனக் கூறப்படுகிறது.

**சிறுவர் இம்சைகள் என்னென்ன வடிவங்களில் இடம்பெறலாம்.**

உடல் வாரியான இம்சையாக → போசாக்கு இழப்பாக → பாலியல் இம்சையாக

→ வைத்திய சிகிச்சையை மறுத்தலாக → கல்வி உரிமையை பறித்தலாக →

→ உடல் / உளவாரியான இம்சையாக → வேலைக்கமர்த்துவதாக → பிள்ளைகளை கைவிடுவதாக

→ நோயில்லாது வைத்தியம் செய்தலாக → வீதிகளில் மிரட்டுவதாக, அடிப்பதாக

→ காதல் புரியும்படி வற்புறுத்துவதாக → அடிப்படை தேவைகளை நிரோதிப்பதாக

பிள்ளைகளை, விற்பதாக கடத்துவதாக → பாலியல் ரீதியில் தூண்டுவதாக, படங்களை காட்டுவதாக

→ சுயதோற்றத்தை கேலி செய்வதாக

▲ எப்படியும், எந்தவடிவத்திலும் சிறுவர் இம்சை நடைபெறலாம்.

அப்படியாயின் இங்கே சிறுவர் இம்சையை இழைத்தோர், இழைத்துக்கொண்டிருப்போர் யார்?

அது தொடர்பான பூரண தகவல்கள்........ அடுத்தவாரம் - இதே பக்கத்தில்! இதே இடத்தில்!!!

வெளியீட்டு அனுசரணை:
**சிறுவர் பாதுகாப்பு நிதியம்.**

உங்கள் தொடர்புகளுக்காய், எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புகுழு,
அறை எண் 30,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்,
T.P.: 021 - 222 5637

(சி-28321)



# சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம், கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் 25-06-2003 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினமே பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும். வேலைக்கு நேரே குறிப்பிடப்படும் தரத்திலுள்ள அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுசெய்த ஒப்பந்தகாரர் மாத்திரமே கேள்விப்பத்திரத்தை கோருவதற்கு தகுதியுடையவராவார்.

கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாண பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்டதுமான வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப்புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்" என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் எதிர்வரும் 25-06-2003ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ பதிவுத் தபால்மூலமோ கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

| வேலையின் பெயர். | பதிவுத் தரம் | மீளளிக்கப்படும் கேள்விக் கட்டணம் | மீளளிக்கப்படாத கேள்வி படிவக் கட்டணம் | படிவக்கட்டணத்திற்கான VAT 20% |
|---|---|---|---|---|
| 1. கொடிகாமம் சந்தைக் கடை அமைத்தல். கட்டடம் - II | இக்ராட் - 7 | 15000.00 | 1000.00 | 200.00 |

மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணத்தையும் மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணத்தையும் படிவத்திற்குரிய VAT பணத்தினையும் செலுத்துவதன் பேரில் 19-06-2003ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இது சம்பந்தமாக மேலதிக விவரங்களை தலைமையலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

*சாவகச்சேரி பிரதேச சபை,*
*தலைமையலுவலகம், கொடிகாமம்.*
*05-06-2003.*

(C/28298)

கு.ந. பாலச்சந்திரன்
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை.


# மரண அறிவித்தல்கள்

## மருதகுட்டி வேலுப்பிள்ளை

கட்டுடை, மானிப்பாயைச் சேர்ந்த மருதகுட்டி வேலுப்பிள்ளை அவர்கள் 06-06-2003 வெள்ளிக்கிழமை மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் தங்கம்மா அவர்களின் அருமைக் கணவரும் சந்திரனின் பெரிய தந்தையும் பத்மாவின் மாமனாரும் பிரியந்தினியின் பாட்டனாரும் கிரிசாவின் வளர்ப்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (08.06.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிட்டிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி வீதி,*
*கட்டுடை, மானிப்பாய்.* (18890)

தகவல்:
வே.தங்கம்மா
(மனைவி).

## சண்முகம் தம்பிப்பிள்ளை

புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 7ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் தம்பிப்பிள்ளை 06-06-2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அமிர்தம்மாவின் அன்புக் கணவரும் புஷ்பராணி, ஞானராணி, சிவஞானம் (சுவிஸ்), பரமேஸ்வரன் (வர்த்தகர், புங்குடுதீவு), இந்திராணி, யோகராணி, மகாராணி (ஆசிரியர், யா/ புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கோபாலபிள்ளை (வர்த்தகர்), முத்துக்குமார், யசோதாம்பாள் (சுவிஸ்), இராஜேஸ்வரி, முருகானந்தம், ராஜ்குமார், கணேசன் (வர்த்தகர் - புங்குடுதீவு) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை மற்றும் பரிமளம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08-06-2003) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கேரதீவு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*7ஆம் வட்டாரம்,*
*புங்குடுதீவு* (18875)

தகவல்:
த.பரமேஸ்வரன்
(மகன்)

## செல்வன் சண்முகதாஸ் யதுஷன்

மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, தலையாழி, அச்சுக்கூட ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட செல்வன் சண்முகதாஸ் (சுரேஸ்) யதுஷன் 06.06.2003 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சண்முகதாஸ் (சுரேஸ்) - ஜீவலதா தம்பதிகளின் அன்பு மகனும் மண்டைதீவு அரியதுரை, ஜீவா, காலஞ்சென்ற கணேசப் மற்றும் நாகதேவி ஆகியோரின் ஆசைப்பேரனும் துஷாந்தன், சுரேஜினி, ஜனனி ஆகியோரின் அருமைத் தம்பியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் கிழக்கு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொக்குவில் கிழக்கு,*
*அச்சுக்கூட ஒழுங்கை,*
*தலையாழி,யாழ்ப்பாணம்* (18892)

தகவல்:
அ.அரியசிவம்
(மாமன்)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்8

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் நடதப்பட்டு வரும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று இடம் பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

✪காலை 8.30 மணி- யாழ் பல்கலைக்கழகம் வி.க. எதிர் யங்ஸ்ரார் வி.க

✪பிற்பகல் 1.30 மணி - கே.ஸி.ஸி.ஸி வி.க. எதிர் மானிப்பாய் பரிஸ் வி.க. (ம-3)

★ ★ ★

கொழும்புத்துறை,ஜூன்,8

அரியாலை சனசமூகநிலையத்தின் 54 ஆவது ஆண்டு நிறைவையொட்டிய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி, இறுதி ஆட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

நிலைய மைதானத்தில் நடைபெறும் மாவட்ட மட்டத்திலான இப் போட்டியில் 30 இற்கும் மேற்பட்ட கழகங்கள் பங்குபற்றின என்பது குறிப்பிடத்தக்கது. (ம-30)

★ ★ ★

வலி.வடக்கு ,ஜூன்8

யாழ்.மாவட்ட கரபந்தாட்ட சங்கம் நடத்தும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நல்லூர் சட்டநாதர் சிவன்கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள சங்க விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:

*ஆண்கள்:*

✪3.00 மணி- காங்கேசன்துறை ஐக்கிய வி.க.எதிர் திருநெல்வேலி ஞானவைரவர் வி.க.

✪பி.ப. 4.00 மணி - மட்டுவில் மோகனதாஸ் வி.க. எதிர் அச்சுவேலி தோப்பு வி.க.

*பெண்கள்:*

✪பி.ப.5 மணி - அச்சுவேலி விக்னேஸ்வரா வி.க. எதிர் நாயன்மார்கட்டு பாரதி வி.க. (ம-86)

# பண்ணிசைப் பாமாலை ஒலிப்பேழை வெளியீடு

வலி.தெற்கு,ஜூன்8

பண்ணிசை கலாநிதியும் சென்னை அண்ணாமலை பல்கலைக்கழக இசை ஆசிரியர் பயிற்சித் துறைத்தலைவரும், பேராசிரியருமான எஸ்.கே.சிவபாலன் எழுதிய இசைநூல்களின் அறிமுகம் என்ற பண்ணிசைப்பாமாலை ஒலிப்பேழை வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் தற்போதைய முதுநிலை பேராசிரியருமான கலாநிதி பொன்.பாலசுந்தரம்பிள்ளை இவ்விழாவுக்கு தலைமைவகிப்பார்

இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் விழாவில் பிரதமவிருந்தினராக கலந்துகொள்வார்.

ஒலிப்பேழையை யாழ்.பல்கலைகழக கலைப்பீடாதிபதி கலாநிதி ப.கோபாலகிருஷ்ணஐயர் வெளியிட்டு சிறப்புரையாற்றுவார்.

நூலின் அறிமுக உரை மதுரகவி காரை.எம்.பி.அருளாநந்தனால் நிகழ்த்தப்படும்.

யாழ்பல்கலைக்கழக இராமநாதன நுண்கலைத்துறை தலைவர் நா.வி.மு.நவரத்தினம்,யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி உப பீடாதிபதி பா.தனபாலன் ஆகியோர் நூல் ஆய்வுரை நிகழ்த்துவார்கள். மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் நூல் பற்றிய ஆய்வுரை நிகழ்த்துவார். (ம-152)

# டோக்கியோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாவை உதவியாகப் பெற்றுக்கொள்ளவும், அதில் கணிசமான பகுதியை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கின் புனரமைப்புக்குச் செலவிடவும் தாங்கள் எதிர்பார்த்திருப்பதாக இலங்கை அரசு வட்டாரங்கள் முன்னர் தெரிவித்துவந்தன.

ஆனால், இந்த மாநாட்டில் பங்குபற்றுவதில்லை எனப் புலிகள் தீர்மானித்திருப்பதால் மாநாட்டின் பெறுபேறில் பெரும் பின்னடைவு ஏற்பட்டிருப்பதாக அவதானிகள் கூறுகின்றனர்.

அந்தப் பின்னணியில் அரசு எதிர்பார்க்கும் உதவி அடுத்த இரண்டு நாள்களாக நடைபெறப்போகும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் முடிவில் கிடைக்குமா என்பதே இப்போதுள்ள கேள்வியாகும்.

இந்த மாநாட்டில் புலிகள் பங்கு பற்றாத நிலையில் அது விடயம் தொடர்பாக மாநாட்டில் பங்குபற்றும் உயர்வலுமிக்க நாடுகளின் பிரதிநிதிகள் - குறிப்பாக அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் ஆர்மிடேஜ் போன்றோர் - மாநாட்டில் தெரிவிக்கப் போகும் கருத்துக்கள் ஆர்வமாக எதிர்பார்க்கப்படுகின்றன.

இந்த மாநாட்டில் புலிகள் பங்குபற்றாததால் தமக்கு ஏற்பட்டுள்ள ஏமாற்றம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மாநாட்டில் தெரிவிக்கப் போகும் கருத்துக்களும் செய்தியாளர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மாநாட்டில் இலங்கை அரசுத் தரப்பினராலோ அல்லது ஏனைய முக்கிய பிரதிநிதிகளாலோ தெரிவிக்கப்படும் கருத்துக்கள் புலிகளை மேலும் சீற்றமுற வைத்து, தற்போதைய சமாதான நடவடிக்கைகளில் இருந்து அவர்களை மேலும் தள்ளி வைக்கச் செய்வதாக அமைந்துவிடக்கூடாது என்பதை உறுதிசெய்வதில் இலங்கை அரச உயர்பீடம் சிரத்தையாக இருப்பதாகத் தெரிகின்றது.

நிலைமையை மேலும் குழப்பாமல் பொறுப்புணர்வுடன் செயற்படுமாறு இந்த மாநாட்டு செய்திகளைச் சேகரிக்கும் செய்தியாளர்களுக்கு 'அன்புக் கோரிக்கை' விடுக்கப்பட்டிருக்கிறது. (ம)

# உதவி மாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணங்கள் இருப்பதாக நான் நினைக்கவில்லை." - என்று இந்தப் பேட்டியின் போது ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் பீரிஸ் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

மாநாட்டில் பங்குபற்றும் முக்கிய - உதவி வழங்கும் நாடுகளின் - பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைப்புகளின் உறுப்பினர்கள் பெரும்பாலும் வந்துசேர்ந்துவிட்டனர். அவர்களுடன் உத்தியோகப்பற்றற்ற பேச்சுகளில் ஈடுபட்டோம்.

அதன்மூலம், முன்னர் நாம் எதிர்பார்த்த அளவு உதவிகள் இந்த மாநாடு மூலம் எமக்கும் கிடைக்கும் என்பதை நாம் ஓரளவு உறுதிப்படுத்திக்கொள்ள முடிந்துள்ளது.

இலங்கையில் சமாதான முயற்சிகள் குழம்பிப் போய்விடவில்லை. அவை இடைநிறுத்தப்பட்டுள்ளன. அந்த முயற்சிகளை மீண்டும் ஆரம்பித்து, அதனை சரியான தடத்துக்குத் திரும்பச் செய்வதில் அரசும் புலிகளும் உறுதியாக இருக்கின்றனர். இதனை மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு எடுத்து விளக்கினோம். அவர்கள் அதனை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இந்த மாநாடு மூலம் வடக்கு, கிழக்குக் கிடைக்கும் நிதி புலிகளின் அதிகப் பங்குபற்றலுடன் - அவர்களின் தீர்மானங்களுக்கு அமையவே - செலவிடப்படும்.

வடக்கு - கிழக்கில் வாழும் ஏனைய இனங்களின் நலனை உறுதி செய்துகொண்டு, புலிகளின் வழிகாட்டுதலின் அடிப்படையில் இந்த நிதி வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்குச் செலவிடப்படும் என்பதையும் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்குத் தெளிவாக விளக்கினோம். இதனையும் அவர்கள் முற்றாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.

ஆகவே நாம் எதிர்பார்க்கும் உதவி எந்தப் பின்னடைவுமின்றி கிடைக்கும் என நம்புகின்றோம் - என்றார் பீரிஸ். (ம)

# ஈ.பி.டி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வும் - தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனைக்காகச் சடலம் திருமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை அடுத்து அந்தப் பிரதேசம் பொலீஸாரால் சுற்றி வளைக்கப்பட்டு, வீடு வீடாக குடும்ப அட்டைகள் சோதனை செய்யப்பட்டன.

உயிரிழந்தவர் சில அமைப்பில் இருந்து சில ஆண்டுகளுக்கு முன் விலகிவிட்டார் என்றும் - இக்கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்றும் - ஈ.பி.டி.பி. வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தெளிவான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டுபிடிக்கலாம் என்றும் பிரதமர் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார்.

'ரொய்ட்டர்' செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் அவர் இதனைக் கூறினார்.

"கிட்டத்தட்ட இடைக்கால கட்டமைப்புக்கு ஒத்த ஓர் அமைப்புக் குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருகின்றது. ஆனால், இது பற்றி விவாதிக்கவேண்டியுள்ளது. கடிதங்களையோ குறிப்புக்களையோ பரிமாறிக் கொள்வதன் மூலம் ஒரு தீர்வுக்கு வந்துவிட முடியாது" - என்று அப்பேட்டியில் ரணில் கூறியிருக்கிறார்.

அவரது இந்தக் கருத்துக் குறித்து அன்ரன் பாலசிங்கத்திடம் கேட்டபோது "வெறும் அறிக்கைகள் சமாதானத்துக்கான அடித்தளமாக அமையமாட்டா" - என்று சொன்னார்.

"இடைக்கால நிர்வாகம் பற்றி நீண்டகாலத்துக்கு முன்பே ஏற்கனவே பேசியுள்ளோம். இப்போது இடைக்கால நிர்வாகம் பற்றிய உறுதியான மற்றும் தெளிவான உள்ளடக்க விவரம் தேவையாக உள்ளது" - என்று அவர் மேலும் கூறினார்.

"கடந்த புதன்கிழமையன்று பிரதமருக்கு நான் எழுதிய கடிதத்தில், இடைக்கால நிர்வாக அமைப்புப் பற்றிய இறுதி வடிவத்துக்கு வருவதற்காக எத்தனை சுற்றுப் பேச்சுக்களை நடத்தி இருந்தோம் என்று குறிப்பிட்டிருந்தேன். ஆனால் தற்போது இதுபற்றிப் பேசவேண்டிய நிலையிலேயே அரசு மீண்டும் இருப்பதால் அது குறித்து மட்டுமே எம்மால் பேசமுடியும்" - என்றும் பாலசிங்கம் கூறினார்.


## கண்டெடுக்கப்பட்டுள்ளது

யோகராசா கமலரூபன் ஆனந்தன் வடலி வீதி அரியாலை என்பவரின் அடையாள அட்டை (770762812v) யுடன், மணிபேர்ஸ் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்

பிள்ளையார் கூல்பார்,
இல.05, பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம். (18898)

## தேவை

இணைப்புடனான
தொலைபேசி உடன் தேவை
தொடர்பு:
021 222 5745 (18897)

## நாகம்ஸ் சுன்னாகம்

சரத்குமார் (இருவேடம்) தேவயானி ஆனந்தராஜ் நடித்த
சூரிய வம்சம் (ரீலஸ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு விசேட காட்சி 7.00 (பு.நே.)

## ராஜா யாழ்ப்பாணம்


இன்று முதல் விஜய், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த





புதிய கீதை
BEHIND ENEMY LINES
(War Film)
இன்று 9.30 மட்டும்.
(C28324)


## வின்சர் அச்சுவேலி


விஜயகாந்த், சௌந்தர்யா, கவுண்டமணி, செந்தில் நடித்த
சொக்கத்தங்கம் (ரீலஸ்)
11.00, 3.00, 7.00 (பு.நே.)

## நிர்மலா? சுன்னாகம்

விஜய், ஷாலினி, ராதாரவி நடித்த
காதலுக்கு மரியாதை (ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
THE ROCK THE SCORPION KING





நேற்று பிற்பகல் நல்லூர் முத்திரைச் சந்திக்கு அண்மையில் பருத்தித்துறை வீதியில் இரண்டு வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளாகின.

ஈ.பி.டி.பியினரின் பிக்கப் வாகனம் ஒன்றும் அந்தியகால சேவை நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான வாகனமுமே மோதி விபத்துக்குள்ளாகின. அந்தியகால சேவை நிறுவனத்தின் வாகனத்தைச் செலுத்தி வந்த சாரதி காயமடைந்தார். இரு வாகனங்களின் முன் பக்கங்களும் பாரிய சேதத்துக்குள்ளாகின.

பருத்தித்துறை வீதியின் நடுவே விபத்துக்குள்ளான இரு வாகனங்களும் அப்படியே நிற்பதை படத்தில் காணலாம்.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு போக்குவரத்து பொலீஸார் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (படங்கள் : தேவா)



மானிப்பாய் றோட்டறக்ட் கழக உறுப்பினர்கள் கடந்த மாத இறுதியில் யாழ்.போதனா வைத்தியசாலையில் இரத்ததானம் செய்தனர். எட்டு அங்கத்தவர்கள் இவ்வாறு இரத்ததானம் வழங்கினார்கள். அப்பொழுது எடுக்கப்பட்ட படம்.

# மரண அறிவித்தல்கள்

## வரப்பிரகாசம் லூயிஸ் செல்வறட்ணம்

சுன்னாகம், புனித அந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்தவரும் திருகோணமலையில் வசித்து வந்தவருமான வரப்பிரகாசம் லூயிஸ் செல்வறட்ணம் நேற்று (07.06.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறிஸ்தோ வரப்பிரகாசம் - மோட்சலங்காரம் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அந்தோனி - மரியம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் மேரி ஆன்னம்மாவின் (ரதி) அன்புக் கணவரும் சாருகாவின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற அருளப்பு நீற்றம்மா மற்றும் டொமினிக், காலஞ்சென்ற ஜோசேப் மற்றும் யாகப்பர் சுகிர்தலங்காரம், சாந்தப்பர் அஞ்சலீனா, கிறிஸ்தோபர் ராஜநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரான்சிஸ், ஞானப்பிரகாசம் (ஜேர்மன்), ரஞ்சனா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (08.06.2003) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு புனித அந்தோனியார் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புனித அந்தோனியார் வீதி,*
*சுன்னாகம்.*

(18899)

தகவல்:
மனைவி

## திருமதி பரிமளம் கந்தையா

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கில் வசித்து வந்தவரும் தற்பொழுது நீர்கொழும்பில் வசித்தவருமாகிய திருமதி பரிமளம் கந்தையா 04.06.2003 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - தங்கம்மா ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசமலர், யோகராசலட்சுமி, யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமநாதன் (Canada), இராசலிங்கம், பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியும் பத்மஜோதி (UK), சிவகுமார் (UK), பத்மகுமார் (Canada), லதா (Canada), பத்மறஞ்சனி (UK), சிதம்பரநாதன் (UK), பத்மரஜினி (Canada), கிருபராஜ் (Canada), இராசரூபன் (Canada), வத்சலா (Canada), யோகரூபன் (Norway), சுஜித்தா (Norway), சாந்தரூபன் (UK), சுபாஜினி (UK), விநோதினி (U.S.A), ரவிச்சந்திரன் (U.S.A), ஸ்ரீராஜன் (Canada), ஸ்ரீகுமார் (Canada), ஸ்ரீதரன் ஆகியோரின் பேர்த்தியும் சஞ்சன் (UK), றாஜி (UK), யாழினி (UK), வித்தியா (Canada), லவானியா (Canada), நதூசன் (Canada), சபித்தா (Canada), திலக்சி (Canada), இலக்கியா (U.S.A), லக்ஷ்மி (UK) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இல. 107, லூயிஸ் பிளேஸ், நீர்கொழும்பு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்கொழும்பு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***107, Lewis, Place***
***Negombo***
***Tel no. 074871134*** (C28326)

தகவல்:
செ.இராசலிங்கம்
*(இளைப்பாறிய சுட்டுநலப் பரிசோதகர்)*

# அதே இடத்தில் சேவையில் நேற்று 400 பேருக்கு பிறப்புச்சான்றிதழ்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்8

யாழ்.செயலகத்தில் நேற்று இடம்பெற்ற 'அதே இடத்தில் சேவையில்' சுமார் 400 பேருக்குப் பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்தகால யுத்தம் காரணமாக பிறப்புக்களை பதிவு செய்யாதவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நோக்குடன் அதே இடத்தில் சேவை நேற்று செயலகத்தில் இடம்பெற்றது.

யாழ்அரச அதிபர் செபத்மநாதன், உதவிப்பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர், யாழ்.மாவட்ட மேலதிக பதிவாளர், எஸ்சுஸ்வரதாஸன் ஆகியோரின் மேற்பார்வையில் இந்தச் சேவை காலை 9 மணிமுதல் மாலை 4 மணி வரை இடம்பெற்றது.

புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா நேற்று பிற்பகல் இந்தச் சேவையில் கலந்துகொண்டார். சேவையைப் பார்வையிட்டதுடன் பதிவாளர்களுடன் கலந்துரையாடினார்.

நேற்று பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் சமுகம் அளித்தபோதும் 400 பேருக்கே சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

சான்றிதழ் பெறவேண்டியவர்களை அழைத்துவராமல் தனியாக ஆவணங்களுடன் சமுகமளித்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை. இதனால் அவர்கள் திரும்பிச் சென்றனர்.

அதே இடத்தில் சேவை இன்றும் காலை 9 மணிமுதல் பிற்பகல் 4.30 மணி வரை இடம்பெறும். (ம-3-8)

# கடனடிப்படையில் ஆசிரியருக்கு மோ.சைக்கிள் வழங்கத் திட்டம்

கொழும்பு,ஜூன்8

ஆசிரியர்களுக்கு விஷேட சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கிள்களை வழங்கவுள்ளதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஆயிரத்து 800 ரூபா முற்பணம் செலுத்தி இம்மோட்டார் சைக்கிள்களைப் பெற முடியும் எனவும்- மூன்று வருடங்களுக்குள் இதற்குரிய தொகை செலுத்தப்படல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம், பொலநறுவை ஆகிய மாவட்டங்களுக்கு இந்தத் திட்டம் முதலில் அறிமுகப்படுத்தப் படவுள்ளதாகவும் தொடர்ந்து ஏனைய பகுதிகளுக்கும் இம்முறை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-12)

# தமிழ்க் கட்சி உறுப்பினர் கொலைகள் மீண்டும் போர் ஏற்பட வழிவகுக்கும்

கொழும்பு,ஜூன்8

வடக்கு - கிழக்கில் இடம்பெற்று வரும் தமிழ்க் கட்சி உறுப்பினர்களின் கொலைச்சம்பவங்கள் மீண்டும் போர் ஏற்பட வழி வகுக்கக் கூடியவை.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கையின் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரியான அக்னோசோபொ.

பி.பி.ஸிஇற்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:- தமிழ்க் கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்கள் படுகொலை செய்யப்படும் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்துவருகின்றன.

இவற்றிற்கு விடுதலைப் புலிகளே பொறுப்பாளிகள் என்று அக்கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

இக்கொலைச்சம்பவங்கள் மீண்டும் ஒரு போர் வெடிக்கக் காரணமாய அமைந்து விடக்கூடியவை.

இச்சம்பவங்கள் குறித்துப் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் தலைவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

இதற்கான பதில் எப்போது வரும எனக் கூறமுடியாது. ஆனால் அதனை எதிர்பார்க்கின்றோம்.

விடுதலைப்புலிகள் இச்சம்பவங்களுக்குத் தாம் பொறுப்பாளிகள் அல்லர் என்கின்றார்கள். இதே வேளை இலங்கை அரசோ, பொலீஸாரோ குற்றவாளிகளை இன்னமும் இனங்காணவில்லை. எனினும் இவை தொடர்பாக ஆராய வேண்டிய பொறுப்பு எம்மிடம் உண்டு எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-12)


COMPUTER COURSES

Batch III June 14th 2003

Time: 10.00 a.m.

பிரிவு III இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மாணவர்களின் அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் பதிவுகளிற்கு முந்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

இயக்குநர்,
IIS,
யாழ்ப்பாணம்.

(சி-28269)


**டோக்கியோ மாநாட்டில்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களின் இடத்துக்கு நேர்வே அரசின் இரண்டாம் நிலை அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்றே பங்கு பற்றும் எனக் கூறப்படுகிறது.(ம-3)

**பல நாட்டு...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் ரணில் உரை ஆரம்பமாகும்.

இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞரின் உரையும் அமைச்சர் பீரிஸின் உரையும் இடம் பெறவிருந்தன. அன்ரன் பாலசிங்கம் மாநாட்டில் கலந்துகொள்ளாததை அடுத்து பீரிஸின் உரையும் ரத்து செய்யப்பட்டுள்ளது. (ம-3)

# பல்கலைக் களஞ்சியத்திலிருந்து சிமெந்து பக்கெற்றுகள் திருட்டு

யாழ்.பல்கலைக்கழக விடுதி கட்டடப் பணிகளுக்கென களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த சிமெந்து பக்கெட்டுக்களை திருடியதாகக் கூறப்படும் இருவர் கோப்பாய் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உதவியதாகக் கூறப்படும் பல்கலைக்கழக காவலாளி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளியன்று இரவு இச்சம்பவம் இடம்பெற்றது. சம்பவதினம இரவு பல்கலைக்கழக வளாகத்துக்கு லான்ட்மாஸ்ரர் நடமாட்டத்தை அவதானித்த பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் சந்தேகம் கொண்டு விசாரணை நடத்தவே திருட்டுப் பற்றி தெரியவந்ததாக கூறப்பட்டது.

லான்ட்மாஸ்ரரும், அதில் ஏற்றப்பட்ட 20 பக்கெட் சீமெந்துகளும் அதன் சாரதி மற்றும் உதவியாளரும் உடனடியாக பாதுகாப்பு ஊழியர்களால் மடக்கப்பட்டனர்.அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் களஞ்சியக்காவலாளியும் பிடிக்கப்பட்டு பொலீஸாரிடம் அனைவரும் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களால் கோண்டாவில் வடக்கில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20 பக்கெட் சிமெந்துகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தத் திருட்டுடன் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் முக்கிய சூத்திரதாரி ஒருவரை கோப்பாய் பொலீஸார் தேடிவருவதாக பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம் தெரிவித்தார். (ம-180)

## இலவச மருத்துவமுகாம்

திருநெல்வேலி லயன்ஸ் கழக ஏற்பாட்டில் இலவச கண்சிகிச்சை முகாம் திருநெல்வேலி வடக்கு கலாசாலை வீதி, கலாசாலை மண்டபத்தில் இன்று நடைபெறவுள்ளது. கண் வைத்திய நிபுணர் கலாநிதி எஸ்.குகதாஸன் நோயாளர்களை பார்வையிடுவார். (ம-180)

**மட்டு...**

ரது மகளான அபிஷா என்பவருமே உயிரிழந்தவர்களாவர். சிவஞானம் வ்வினியா என்ற 8 வயதுச்சிறுமி காயமடைந்தார்.

ஆரையம்பதி கண்ணகை அம்மன் ஆலய உற்சவத்தில் கலந்துகொண்டுவிட்டு சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த இவர்கள் மீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டு துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவம் நடந்த இடத்தில் இருந்து கைத்துப்பாக்கி ஒன்றும் சில வெற்றுரவைகளும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

பிரஸ்தாப நபர் ரெலோ அமைப்பில் இருந்து பிரிந்து இராணுவத்துடன் இணைந்து செயற்பட்ட வரதர் அணியைச் சேர்ந்தவர் எனக் கூறப்பட்டது. (ம-3-12)








இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.06.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.